Registered as a news paper. பக்கங்கள்: பன்னிரண்டு விலை ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்



மொறாயஸ் ஒளிச்சுடர்
பல்,மூக்குக் கண்ணாடியகம்
பல் கட்டுதல், மூக்குக் கண்ணாடி வழங்குதல்
[1962 முதல் 1995 வரை யாழ்.வெலிங்டன் திரையரங்கு முன்பாக இயங்கியது.]
இல.546, ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 021 222 7893

மலர்: 03 திருவள்ளுவர் ஆண்டு :2035 கார்த்திகை 20 ஆம் நாள் ஹிஜ்ரி 1427 ஷவ்வால் 22 (05.12.2004) ஞாயிற்றுக்கிழமை இதழ்:66

## ஆயிரக்கணக்கானோர் பங்கேற்ற மெல்பேர்ன் மாவீரர் தின நிகழ்வு

(மெல்பேர்ன்)

அவுஸ்ரேலியாவின் விக்ரோறியா மாநிலத்திலுள்ள மெல்பேர்ன் நகரில் நேற்று இடம்பெற்ற மாவீரர் தின நிகழ்வுகளில் ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

மண்டபம் நிறைந்த நிகழ்வாக இடம்பெற்ற இந்த நிகழ்வில்- தமிழீழ விடுதலைப் புலிகளின் அவுஸ்ரேலியப் பொறுப்பாளர் ஜெயக்குமார் பொதுச் சுடர் ஏற்றினார்.

இதையடுத்து தமிழீழ விடுதலை விரும்பியான அருட்தந்தை றிச்சாட் வூட்டன் அவுஸ்ரேலிய தேசியக் கொடியையும், தமிழீழ தேசியக் கொடியை தமிழீழ விடுதலைப் புலிகளின் விக்ரோறியா மாநிலப் பொறுப்பாளர் யாதவனும் ஏற்றி வைத்தனர்.

தொடர்ந்து ஈகச் சுடர் ஏற்றல், மலர் மாலை அணிவித்தல், மாவீரர் குடும்பங்களின் மலர் வணக்கம், பொதுமக்களின் மலர் வணக்கம், அக வணக்கம் ஆகியனவும் இடம் பெற்றன.

இந்த நிகழ்வில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரனின் மாவீரர் நாள் உரை அகலத் திரையில் ஒளிபரப்பப்பட்டது. (12 ஆம் பக்கம் பார்க்க)

### ஜே.வி.பியினர் குறித்த

## நோர்வேயின் அதிரடி நடவடிக்கை; மங்கள மீது சந்திரிகா பாய்ச்சல்!

(கொழும்பு)

சமாதான முயற்சிகளில் நோர்வேயின் பங்களிப்புக் குறித்து காட்டமாக விமர்சித்து, ஜே.வி.பி. அனுப்பிவைத்த கடிதத்தை அடுத்து, நோர்வேத் தூதரகம் இராஜதந்திர நடவடிக்கைகள் எடுத்ததைத் தொடர்ந்து, கோபமடைந்த ஜனாதிபதி சந்திரிகா - அமைச்சர் மங்கள சமரவீரவை அழைத்து கடுமையாகக் குற்றம் சாட்டியதாகத் தெரியவருகிறது.

இந்தச் சம்பவம் குறித்துக் கேள்வியுற்ற ஜனாதிபதி சந்திரிகா உடனடியாகவே அமைச்சர் மங்கள சமரவீரவை ஜனாதிபதி மாளிகைக்கு அழைத்திருந்தார்.

இந்தச் சந்திப்பின்போது -

ஜே.வி.பியின் செயற்பாடுகள் குறித்து கடுமையாகக் குற்றம் சாட்டினார். ஜே.வி.பி. இனவாதத்தைக் கிளப்பி நாட்டை யுத்தத்திற்கு இட்டுச்செல்கின்றது. அவர்களை வீரர்களாக்குவது நீர்தான், எனவே, இவற்றுக்கெல்லாம் நீர்தான் பதிலளிக்க (12 ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கையுடனான பாதுகாப்பு ஒப்பந்தம்

# இந்தியாவை கைவிடுமாறு கோரி சர்வதேச ரீதியில் ஆர்ப்பாட்டங்கள்

(நியுயோர்க்)

**இலங்கை அரசாங்கத்துடன் பாதுகாப்பு உடன்படிக்கை கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள திட்டத்தைக் கைவிடக்கோரி – சர்வதேச ரீதியில் இந்தியாவுக்கு அழுத்தம் கொடுக்கும் போராட்டங்களை முன்னெடுப்பதற்கான முயற்சிகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.**

**இது தொடர்பாக அமெரிக்காவிலுள்ள ஈழத் தமிழர்கள் புலம்பெயர்ந்துவாழும் தமிழர்களுக்கு வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளனர்.**

**இது தொடர்பாக அமெரிக்காவிலுள்ள ஈழத் தமிழர்கள் விடுத்த அறிக்கையில் –**

பொங்கு தமிழ் எழுச்சி நிகழ்வு, மாவீரர் தினம் ஆகிய தமிழீழத் தேசிய நிகழ்வுகளில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் காண்பித்த எழுச்சியைப் போன்று -

எல்லா நாடுகளிலும் தமிழ் மக்கள் பாரிய அளவிலான ஊர்வலங்கள் ஆர்ப்பாட்டங் களை நடத்தி இலங்கை அரசாங்கத்துடன் செய்து கொள்ள உத்தேசித்துள்ள பாதுகாப்பு உடன் படிக்கையை நிறுத்தக்கோரி - அந்தந்த நாடுகளிலுள்ள இந்தியத் தூதரகங்களில் மகஜர்களைக் கையளித்து தமிழ்மக்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்க வேண்டும்.

அப்போதுதான் சர்வதேச சமூகம் இந்த விடயத்திலுள்ள காத்திரத்தைப் புரிந்துகொண்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தொடர்ந்து பெய்யும் மழையால் குடாநாட்டில் பலர் இடம்பெயர்வு!

(யாழ்ப்பாணம்)

நேற்றுமுன்தினம் மாலை தொடக்கம் நேற்று இரவுவரை 24 மணி நேரத்துக்கு மேலாக யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழையால் பல்வேறு பகுதிகளிலும் வெள்ளப் பாதிப்புக்கள் ஏற்பட்டுள்ளன.

குறுகிய நேரத்திற்குள் பெய்த கடும் மழையால் தாழ்வான பகுதிகளில் மட்டுமன்றி பல்வேறு இடங்களிலும் வெள்ளம் தேங்கியுள்ளது.

குளங்கள் நிரம்பியதுடன் வீதிகளிலும் வெள்ளம் பாய்ந்தோடியது. இதனால் வீதிகளின் அனேகமான இடங்களில் அரிப்பு ஏற்பட்டு சேதமடைந்து போக்குவரத்துப் பாதிக்கப்பட்டது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஜே.வி.பி அனுப்பிய கடிதத்தால் சமாதான முயற்சியில் சிக்கல்!

(கொழும்பு)

சமாதான முயற்சியில் நடுநிலைமையாளர்களாகச் செயற்படும் நோர்வே அரசின் பங்களிப்புக் குறித்து, தமக்கு எவ்வித நம்பிக்கையும் இல்லையென ஜே.வி.பி. கொழும்பிலுள்ள நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தியதன் பின்னர் சமாதான முயற்சிகள் பாரிய சிக்கல் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாக அரசாங்கத் தகவல்கள் தெரிவித்தன.

தாம் அனுப்பும் இந்தக் கடிதம் அரசு என்ற ரீதியிலானது என ஜே.வி.பி குறிப்பிட்டுள்ளதனாலேயே அதிகளவிலான சிக்கல் தோன்றியுள்ளது.

ஜே.வி.பியின் பொதுச் செயலர் ரில்வின் சில்வாவின் கையொப்பத்துடன் அனுப்பப்பட்டதுடன், அனுப்பப்பட்ட இந்தக் கடிதத்தில் நோர்வே மீது ஜே.வி.பி பல குற்றச்சாட்டுக்களை சுமத்தியுள்ளது.


இதன்படி நோர்வே அரசு கடற்புலிகளின் பயிற்சிகளுக்கு உதவி செய்துள்ளதாகவும், போர்நிறுத்த காலத்தில் விடுதலைப் புலிகளுக்கு பிடித்தவர்களாக நோர்வேயின் பிரதிநிதிகள் இருந்ததாகவும், விடுதலைப் புலிகளின் அனைத்து தேவைகளுக்கும் ஏற்ப நடந்து கொள்வதாகவும் இருப்பதாக அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

நோர்வே தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கருக்கு இந்தக் கடிதம் கிடைத்த பின்னர் ஜனாதிபதி சந்திரிகாவிற்கும், வெளிநாட்டு அமைச்சர் கதிர்காமருக்கும் இரண்டு கடிதங்களை அனுப்பி ஜே.வி.பி தமக்கு எதிராக எழுப்பியுள்ள இந்த முறைப்பாடுகள் அரசாங்கத்தின் கருத்தா என விசாரித்துள்ளதாக ஜனாதிபதி மாளிகை தகவல்கள் தெரிவித்தன.

அத்துடன் ஜே.வி.பியின் இந்தக் கடிதம் தொடர்பாக ஹான்ஸ் பிரட்ஸ்கர், நோர்வே வெளிநாட்டமைச்சர் ஜான் பீற்றர்சனுக்கு அறிவித்துள்ளதாகவும், அடுத்துவரும் ஒருவார காலத்திற்குள் ஜே.வி.பியின் கடிதத்திற்கான பதிலை ஜான் பீற்றர்சன் ஜனாதிபதி சந்திரிகாவிற்கு அனுப்பி வைப்பார் எனவும் தகவல்கள் தெரிவித்தன. (தே)

## ஆகக் கூடிய மழை வீழ்ச்சி குடா நாட்டில் பதிவாகியது!

(யாழ்ப்பாணம்)



செய்மதிப் படம்.

யாழ். குடாநாட்டில் அண்மைக் காலத்தில் மிகமோசமான மழைவீழ்ச்சி நேற்று முன்தினமும், நேற்றும் இருந்ததாக வளிமண்டலவியல் திணைக்களத் தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

நேற்றுமுன்தினம் மாலை ஆரம்பித்த கடும் மழை யாழ். குடாநாடு முழுவதும் நேற்று முழுநாளும் தொடர்ந்து பெய்தது.

நேற்றுக் காலை 9 மணியளவில் முடிவடைந்த 24 மணிநேரத்தில் மட்டும் யாழ். குடாநாட்டில் 64.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியது. அதேவேளை, நேற்றுக் காலை 9 மணிமுதல் பிற்பகல் 3.30 மணி வரையான ஆறரை மணித்தியாலங்களில் 78.3 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சி பதிவாகியது.

அண்மைக் காலங்களில் ஒரே நாளில் பெய்த ஆகக்கூடுதலான மழைவீழ்ச்சி இதுவாகவே இருக்கும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை நேற்றுக் காலை 9 மணியுடன் முடிவடைந்த 24 மணிநேரத்தில் மன்னாரில் 18.1 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், வவுனியாவில் 5.2 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், திருகோணமலையில் 7.4 மில்லி மீற்றர் மழை வீழ்ச்சியும், பொத்துவிலில் 8.9 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும், மட்டக்களப்பில் 9.7 மில்லி மீற்றர் மழைவீழ்ச்சியும் பதிவாகியிருப்பதாக வளிமண்டலவியல் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
EXPOAIR
Your friend in the skies...

# தென்மராட்சி, யாழ்.வலய பாடசாலைகளின் நூலகங்களுக்கான புத்தக விநியோகம்

ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவித்திட்டத்தின் கீழ், வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள தெரிவு செய்யப்பட்ட தமிழ்மொழிப் பாடசாலைகளுக்குரிய நூலக அபிவிருத்திக்காக வழங்கப்படும் நூல்கள் வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்கத்தினால் நாளை மறுதினம் காலை 9.00 மணிக்கும் பி.ப 3.00 மணிக்குமிடையில் யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்திலும், மறுநாள் புதன்கிழமை காலை 10.00 மணிக்கும் பி.ப 1.00 மணிக்கும் இடையில் தென்மராட்சி வலயக் கல்வி அலுவலகத்திலும் வைத்து வழங்கப்படும் என மாகாண நூலக இணைப்பாளர் ந.அனந்தராஜ் தெரிவித்துள்ளார்.

கீழே குறிப்பிட்ட பாடசாலை அதிபர்கள் அல்லது அவரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் இந்த நூல்கள் அடங்கிய பொதிகளைப் பெற்றுக் கொள்ளமுடியும் என்றும் வரும் போது நூலக பொருட்பதிவேட்டுப் புத்தகத்தையும் உத்தியோக முத்திரையையும் தவறாது எடுத்து வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை இ.ம.வித்தியாலயம், யாழ்.சன்மார்க்க மகா வித்தியாலயம், புனித சாள்ஸ் மகா வித்தியாலயம், சென்.ஜேம்ஸ் மகா வித்தியாலயம், வைத்தீஸ்வராக் கல்லூரி, கொழும்புத்துறை சென் ஜோசப் வித்தியாலயம், கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம், கொட்டடி நமசிவாயம் வித்தியாலயம்,

நல்லூர் சிறி விக்னேஸ்வரா வித்தியாலயம், நாவாந்துறை றோ.க.வித்தியாலயம், சென் அன்ரனீஸ் றோ.க.பெண்கள் பாடசாலை, யாழ். ஜேம்ஸ் பெண்கள் பாடசாலை, யா.சென். மேரிஸ்.றோ.க.த.க. பாடசாலை, சென் .றோசச்சஸ் றோ.க.வித்தியாலயம், யா.வண்ணை நாவலர் மகா வித்தியாலயம், செங்குந்தா இந்துக்கல்லூரி, முத்துத்தம்பி மகா வித்தியாலயம், அரியாலை சிறிபார்வதி வித்தியாலயம், கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்,

கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம், கொக்குவில் கிழக்கு நாமகள் வித்தியாலயம், கொக்குவில் சிறி கணபதி வித்தியாலயம், கொக்குவில் இராமகிருஷ்ண மகாவித்தியாலயம், கோண்டாவில் இராமகிருஷ்ண வித்தியாலயம்,

நல்லூர் இந்து தமிழ் பெண்கள் பாடசாலை, நல்லூர் ஸ்ரேசன் சி.சி. த.க.பாடசாலை, நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம், யாழ். இந்துக் கல்லூரி, உயரப்புலம் மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, அரியாலை கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, கலட்டி மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம், இளையதம்பி இந்து வித்தியாலயம்,

அரியாலை பூம்புகார் அ.த.க.பாடசாலை, அச்சுவேலி மகா வித்தியாலயம், அத்தியார் இந்துக் கல்லூரி, கோப்பாய் மகா வித்தியாலயம், அச்செழு சிவப்பிரகாச மகா வித்தியாலயம், அச்சுவேலி சரஸ்வதி வித்தியாலயம், சென் திரேசா பெண்கள் பாடசாலை, ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம், நடராஜா ராமலிங்கம் வித்தியாலயம், சரவணபவாநந்தா வித்தியாலயம்,

புத்தகலட்டி சிறி விஸ்ணு வித்தியாலயம், ஊரெழு கணேசா வித்தியாலயம், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம், வாதரவத்தை விக்னேஸ்வரா வித்தியாலயம்,

தென்மராட்சி டிறிபேக்கல்லூரி, சந்திரபுர ஸ்கந்தவரோதயா வித்தியாலயம், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம், நாவற்குழி மகாவித்தியாலயம், உசன் இராமநாதன் மகாவித்தியாலயம், மீசாலை விக்னேஸ்வரா மகாவித்தியாலயம், முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயம், அல்லாரை அரசினர் தமிழ்க் கலவன்வித்தியாலயம்,

எழுதுமட்டுவாள் கணேசா வித்தியாலயம், கச்சாய் அரசினர் த.க.பாடசாலை கைதடி குருசாமி வித்தியாலயம். கைதடி நுணாவில் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம், சந்திரமௌலீச வித்தியாலயம், மந்துவில் கமலாசனி வித்தியாலயம், மந்துவில் அமெரிக்கன் மிசன் தமிழ்க் கலவன் பாடசாலை, மந்துவில் தெற்கு சரஸ்வதி வித்தியாலயம்,

மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம், மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம், மிருசுவில் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, சரசாலை ஸ்ரீகணேசா வித்தியாலயம், இடைக் குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தியாலயம், விடத்தற்பளை கமலாசனி வித்தியாலயம், எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்கலவன் பாடசாலை, கைதடி நாவற்குழி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மந்து வில் றோ.க.த.க.பாடசாலை, கொடிகாமம் பெண்கள் வித்தியாலயம்

## எய்ட்ஸ் விழிப்புணர்வு கருத்தரங்கு

தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் எயிட்ஸ் நோய் பற்றிய மீள்பார்வைக் கருத்தரங்கு நாளை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளதாக பிரதேச செயலக அதிகாரி தெரிவித்தார்.

# கலை விழாவும் பரிசளிப்பு விழாவும்

(மீசாலை)

மட்டுவில் கிழக்கு மாதுமை மழலைகள் கல்விப் பூங்காவின் பரிசளிப்புவிழாவும் கலைவிழாவும் இன்று பி.ப.2-00 மணிக்கு பூங்கா இயக்குநர் சி.சிவகாந்தன் தலைமையில் மட்டுவில் பூதன் கேணிவளவு மகாகாளி அம்மன் திருவருட் கூட மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக தென்மராட்சி வலய திட்டப்பணிப்பாளர் கிருபாதேவி வீரசிங்கமும் சிறப்பு விருந்தினர்களாக ஆரம்ப உதவிக் கல்விப் பணிப்பாளர் த.ஸ்ரீஸ்கந்தராசா, முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் சு.பாகியராசா ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக மட்டுவில் வடக்கு கிராம அலுவலர் சி.கனகரத்தினம், பொதுச் சுகாதாரப் பரிசோதகர் கா.சிவநேசகுமார், பொதுச்சுகாதாரப பரிசோதகர் இ.சிரேஸ்டகுமார், வலய இணைப்பாளர் சிவதர்மிகா இராமச்சந்திரன், க.கணேசலிங்கம் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (25)


## துயர் பகிர்கின்றோம்

சிவன் பதம் சேர்ந்த எமது மாமனார்

### சிவனடி முத்துக்குமார்

மறைவு கேட்டு அதிர்ந்துள்ளோம். அவரது மறைவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

மா. குலேந்திரன் (லண்டன்),
திருமதி. செ. உமாமகேஸ்வரன்,
திருமதி. இ. கந்தசாமி.

(998)

## என்றும் எங்கும் இல்லாத கொள்ளை மலிவு



வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கிணங்க நத்தார் பண்டிகை, புதுவருடத்தை முன்னிட்டு உங்கள்

லைடன் புடவை நிலையத்தில்

மாபெரும் மலிவு விற்பனை

05.12.2004 தொடக்கம் 31.12.2004 வரை

விசேட கழிவு விலையில் சகல வித ஆடைகளையும் உங்கள் எண்ணம் போல் புத்தம் புது நவீன டிசைன்களில் பெற்றுக்கொள்ள

லைடன் புடவை நிலையம்

410, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P. 222 – 2381

(C/3437)

## BODY TONE

ஆரோக்கியவில்லை



களைப்பையும், சோம்பல் தன்மையை போக்கி, மேலதிக சக்தியையும், சுறுசுறுப்பையும் கொடுக்க கூடியது

நாளொன்றுக்கு தேவைக்கு எற்ப 1 –3

யாழ் நகரில் விநியோகஸ்தர்கள் தேவை

K.S.P. International Pharmacy Tel : 2449766

## நாதன்ஸ் யாழ்ப்பாணம்.

இன்று முதல் (குளிரூட்டப்பட்டது)
இலங்கையில் முதன்முறையாக வெளியிடப்படும் திரைப்படம்
இளைய தளபதி விஜய், சங்கவி நடித்த
கோயம்புத்தூர் மாப்பிள்ளை (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 10.30.2.30, 6.30, 9.30 (பு.நே) (சி-3319)

## நிறைஞ்சனாஸ் சங்கானை

விஜயகாந், சமீதாரெட்டி நடித்த
ராஜ்ஜியம் (ரீல்ஸ்)
காட்சி நேரம்: 11.00, 2.45, 6.00 (பு.நே)
வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே)
VANHELSING (நகுல படம்) (சி-2723)

## ராஜா யாழ்ப்பாணம்.

5ம் திகதி வரை
அஜித், பூஜா நடித்த
அட்டகாசம்
காட்சி நேரம்: 10.30.2.30, 6.30 மட்டும்
6ம் திகதி முதல்
போஸ் (ரீல்ஸ்) (சி-3319)

## நாகலிங்கம் சுன்னாகம்

இலங்கையிலும் இந்தியாவிலும் ஒரேதின வெளியீடான



P.B.சௌத்திரியின்
சரத்குமார், நமீதா, வடிவேல் நடித்த
சத்ரபதி
கா.நே. - 11.00, 3.00, 7.00
6ம் திகதி முதல் அட்டகாசம்


# றெமிங்ரன் கல்வி நிலையத்தின் 30 ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பும்

மூளாய் றெமிங்ரன் கல்வி வளர்சோலையின் 30ம் ஆண்டு நிறைவு விழாவும், பரிசளிப்பும், மலர் வெளியீட்டு விழாவும் இன்று நடை பெறவுள்ளது.

இன்று காலை 8 மணிக்கு மூளாய் பிரசாத் மண்டபத்தில் நிறுவனத்தின் சிரேஷ்ட ஆசிரியர் ஸ்கந்தகுமார் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்மாவட்ட நாடாளுன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் சிறப்புவிருந்தினராக தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதி பதி பா.தனபாலனும், கௌரவ விருந்தினராக சங்கானை அரசியற் துறைப் பொறுப்பாளர் அ.அன்பும் கலந்து கொள்ளவுள்ளனர்.

விழாவில் றெமீங்ரன் தீபம் என்ற மலர் வெளியீட்டு விழாவும் வழக்காடுமன்றம், நாடகம், மேலைதேய நடனம் போன்ற கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

# உடுவில் கோட்ட பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம்

உடுவில் கல்விக்கோட்டப் பாடசாலை அபிவிருத்தி குறித்து அதிபர்களுடன் ஆராயும் கூட்டம் எதிர்வரும் புதன்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

அடுத்த ஆண்டு முதலாம் தவணையில் மேற்கொள்ளப்பட வேண்டிய பாடசாலை வேலைத் திட்டங்கள், பாடசாலைக் கல்வி அபிவிருத்தி தொடர்பான செயற் திட்டங்கள், ஆசிரியர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்தல், ஆண்டு 1, ஆண்டு 6, ஆகிய வகுப்புக்களுக்கான மாணவர் அனுமதி, அதிபர், ஆசிரியர் செயலாற்றுகைத் தரக் கணிப்பீட்டு விடயங்கள் போன்றவை தொடர்பாகக் கலந்துரையாடப்படவுள்ளது. இந்தக் கூட்டத்தில் அனைத்து அதிபர்களையும் தவறாமல் கலந்துகொள்ளுமாறு கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்தார்.

அடுத்த ஆண்டில் பாடசாலைகளில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்மொழிவுகளை தயாரித்து இம் மாதம் 28 ஆம் திகதிக்கு முன் கோட்டக் கல்வி அலுவலகத்தில் கையளிக்கவேண்டுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (101)

# உருவப்படம் திரைநீக்கம்

ஞானபாஸ்கரோதயா சங்கத்தின் 84 ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு மறைந்த, சங்கத்தின் முன்னாள் தலைவர்களான பொன்னுத்துரை சிவலிங்கம், கந்தையா முத்து லிங்கம் ஆகியோரின் உருவப்படங்கள் இன்று மாலை 4.30 மணிக்கு திரைநீக்கம் செய்யப்படவுள்ளது.

சங்கத்தின் முன்னாள் தலைவர் கே.சிவசுந்தரமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் கோப்பாய் பிரதேச செயலர் அஞ்சலாதேவி சாந்தசீலன் பிரதம விருந் தினராகவும், நீர்வேலி பிரதேசசபைச் செயலாளர் இ.இராசதுரை, கல்வியங்காடு கிராம அலுவலர் சு.முத்துக்குமாரசாமி, கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரிபதி செல்வம், வலிகிழக்கு அரசியற் துறைப் பொறுப்பாளர் சங்கர் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

# நெடுந்தீவு கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்வு இன்று

நெடுந்தீவு பல.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் வெள்ளிவிழா நிகழ்வுகள் இன்று காலை 10.30 மணி முதல் நெடுந்தீவு சங்கத்தின் தலைமைச் செயலக்த்தில் நடைபெறவுள்ளது.

சங்கத் தலைவர் சு.கோபாலசிங்கம் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில், யாழ்ப்பாண கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் செ.கனகசபாபதி பிரதம விருந்தினராகவும், யாழ்.மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இதேவேளை வெள்ளி விழாவையொட்டி நெடுந்தீவு பாட சாலை மாணவர்களிடையே நடாத் தப்பட்ட ஆக்கத்திறன் போட்டியில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் மற்றும் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பில் வெற்றி பெற்றோருக்கான பரிசில்களும் வழங்கப்படவுள்ளன. (113)

# பூவேந்தன் பாலர் பராமரிப்பு நிலையத்தின் கலைவிழா

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கையில் அமைந்துள்ள 'பூவேந்தன்' பாலர் பகல் பராமரிப்பு நிலையத்தின் கலைவிழா இன்று பி.ப.2.00 மணிக்கு நிலையத் தலைவர் வை.இராசரத்தினம் தலைமையில் பராமரிப்பு நிலைய அரங்கில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இந்து சமய கலாசாரத் திணைக்கள உதவிப் பணிப்பாளர் சிவமகாலிங்கம், கௌரவ விருந்தினராக தென்மராட்சி பிரதேசசெயலக சிறுவர் நன்நடத்தை உத்தியோகத்தர் எஸ்.சிவகரன், சிறப்பு விருந் தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜ், தென்மராட்சிக் கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் செ.கலைவாணன், தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்பாளர் சு.ஜெயராஜ், தென்மராட்சிவலய முன்பள்ளி உதவிக்கல்விப் பணிப்பாளர் சு.பாக்கியராசா, நகரசபைச் செயலாளர் தவமணி தேவி ஆறுமுகம், சாவகச்சேரி - கைதடி வணிகர் மன்றத் தலைவர் சு.சி.அருளானந்தம் ஆகியோரும் கலந்து கொள்ள வுள்ளனர்.

இந்த நிகழ்வில் சிறார்களின் கலைநிகழ்வுகள், சிறப்பு நிகழ்ச்சிகள் இடம்பெறவுள்ளன. (25)

# நாவலர் விழாவும் கலைவிழாவும்

(உடுவில்)

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடாத்தும் நாவலர் விழாவும், பாலர் பாடசாலை மாணவர்களின் கலைவிழாவும் இன்று பிற்பகல் 1.30 மணிக்கு உடுவில் மான்ஸ் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

உடுவில் இந்து இளைஞர் மன்றத் தலைவர் தி. தியாகச்சந்திரன் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் சி.திருவாகரனும் கௌரவ விருந்தினராக செஞ்சொற்செல்வர் ஆறு.திருமுருகனும், சிறப்பு விருந்தினராக கங்கைவேணியனும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வில் பாலர் பாடசாலை ஆசிரியர்களைக் கௌரவித்தலும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

## சுங்கப் பரிசோதனைகளின்போது அரசியல்வாதிகளுக்கு சலுகையில்லை!

### ஜனாதிபதி சந்திரிகா உத்தரவு

(கொழும்பு)

அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை அமைச்சர்கள், உறுப்பினர்கள் அனைவரும் நாட்டை விட்டு வெளியேறும் போதும், நாடு திரும்பும்போதும் வழமையான சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நிதி யமைச்சுக்கு கண்டிப்பான உத்தரவுபிறப்பித்துள்ளார்.

குறிப்பிட்ட அரசியல் பிரமுகர்கள் சிலர் கடத்தல் போன்ற நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருப்பதாக வெளியான தகவல்களை யடுத்தே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

சாதாரண பயணிகள் சுங்கப் பரிசோதனைக்கு உட்படுத்தப்படும் பிரிவு ஊடாகவே இவர்களும் இனிமேல் செல்ல வேண்டும்.

இந்த விடயத்தில் ஏதாவது பிரச்சினைகள் இருக்குமானால், நிதியமைச்சு ஊடாகத் தனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட வேண்டும் என, சுங்கத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்துக்கும் ஜனாதிபதி சந்திரிகாவால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

## நாட்டில் எண்பது சதவீதமான மக்கள் சமாதானத்தையே விரும்புகின்றார்கள்

### ஜனாதிபதி சந்திரிகா



நாட்டில் 80 சதவீதமான மக்கள் சமாதானத்தை விரும்புகின்றார்கள். சொற்ப தொகையினரே அதற்கு எதிராக உள்ளனர். இருப்பினும் யார் விரும்பினாலும், விரும்பா விட்டாலும் சரி நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதே தனது இலக்கு என ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் மொனறாகலையில் நடைபெற்ற பொதுக் கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் -

'ஒரே இரவில் சமாதானத்தை ஏற்படுத்த முடியாது' எத்தகைய நெருக்கடி நிலை, அல்லது தடைகள் வந்தாலும், அதற்கு முகம் கொடுத்து நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்படுத்தப்படும்.

விடுதலைப் புலிகளுடன் பேச, அரசாங்கம் தயாராகவிருக்கிறது. தற்போது அமுலிலுள்ள போர் நிறுத்த உடன்படிக்கை என்பது - யுத்த நிறுத்தமே தவிர, போர் முடிந்து விட்டது என்பது அல்ல. சில சந்தர்ப்பங்களில் அந்த உடன்படிக்கை கூட ஒரு தரப்பினரால் மீறப்படுகிறது.

சிங்கள பௌத்த மக்கள் உட்பட தமிழ், முஸ்லிம் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் வகையில் அதிகாரப் பகிர்வை அமுல்படுத்துவதே இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வாக அமையும். இதற்கு பேச்சுவார்த்தை தான் பொருத்தமான வழி.

விடுதலைப் புலிகளால் முன் வைக்கப்பட்டுள்ள தன்னாட்சியுள்ள இடைக்கால நிர்வாக யோசனை தொடர்பாகப் பேச, அரசாங்கம் தயார். ஆனால், அது மட்டுமல்ல, இறுதித் தீர்வு தொடர்பாகவும் பேச வேண்டும். அப்போதுதான் நிரந்தரத் தீர்வை எட்ட முடியும்.

சமாதானத்தை அடைவது தொடர்பாக மக்களுக்கு அளித்த வாக்குறுதி நிறைவேற்றப்பட்டு, மக்களுக்கு மதிப்பளிக்கப்படும். இதற்காகவே கடந்த 10 வருடங்களாக அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இரு பிரதான தேசிய கட்சிகளும் இணைந்து செயற்பட்டிருந்தால், விடுதலைப் புலிகள் எம்மீது குற்றம் சுமத்த வேண்டிய அவசியம் வந்திருக்காது. இதற்குக் காரணம் ஐ.தே.க. இணைந்து செயற்பட முன்வருவதில்லை. அந்தக் கட்சி விடுதலைப் புலிகளுடன் இணைந்து, மீண்டும் தமது ஆதிக்கத்தை நிலைநாட்ட முற்படுகிறது எனவும் தெரிவித்தார்.

## இந்தோனேசிய தூதராக ஜானக பெரேரா மாற்றம்!

இலங்கை வெளிவிவகார அமைச்சு வெளிநாட்டு ராஜதந்திர சேவைகளில் சில புதிய நியமனங்களை செய்யவிருப்பதையடுத்து, புதிதாக நியமிக்கப்படவுள்ள தூதுவர்களின் பெயர்களை பொதுமக்களின் பார்வைக்காக முன்வைத்துள்ளது.

அரசாங்கத்துறையில், அரச கூட்டுத்தாபனம் பதவிகள் தொடர்பாக ஆராயும் நாடாளுமன்ற உயர் பதவிக்குழு உத்தேசிக்கப்பட்டுள்ள 10 தூதுவர்களின் பெயர் விபரங்களை அறிவித்துள்ளது.

இதன்படி தற்போது அவுஸ்ரேலியாவுக்கான இலங்கைத் தூதுவராகப் பணியாற்றும் மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா இந்தோனேசியாவுக்கான தூதுவர் பதவிக்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளார்.

அவுஸ்ரேலியாவுக்கான புதிய தூதுவர் பதவிக்கு- ஜனாதிபதியின் முன்னாள் செயலாளரான கே.பாலபட்டபெந்தி தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

தற்போது சுவிஸ் மற்றும் ஜேர்மன் ஆகிய நாடுகளுக்கான தூதுவராகப் பணியாற்றும் சி.டி.காசிச்செட்டி - மலேசியாவுக்கும்,

தேசிய வீடமைப்பு அதிகார சபைத் தலைவராகப் பணியாற்றும் எம்.என்.யுனைட் - ஐக்கிய அரபு இராச்சியத்துக்கும்,

முன்னாள் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி சில்வா - கனடாவுக்கும்,

சேனுகா செனவிரத்ன - அமெரிக்காவுக்கும், எம்.எல்.எம். பாருக் - மாலைதீவுக்கும்,

எம்.கே.என் கீரன் - கென்யாவுக்கும், டபிள்யூ.எஸ். இரத்தினவேல் - சிங்கப்பூருக்கும் தூதுவர்களாக நியமிக்கப்படுவதற்கான முன்மொழிவுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

## வில்பத்து காட்டுப் பகுதியில் புலிகளின் பயிற்சி முகாம்!

### பொலிஸ் உளவுப்பிரிவு தகவல்

(கொழும்பு)

வில்பத்து காட்டுப்பகுதியில் மன்னார் கடல் நீரேரிக்குச் சமீபமாக விடுதலைப் புலிகள் பயிற்சி முகாம் ஒன்றை அமைத்து பயிற்சியில் ஈடுபட்டு வருவதாகப் பொலிஸ் உளவுப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

மன்னார் மாவட்ட எல்லையில் - கல்லாறு, மற்றும் சிலாபத்துறை பகுதிகளுக்கு இடையில் இந்தப் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தப் பயிற்சி முகாமில் கடற்புலிகள் நிரந்தர கட்டடங்கள் அமைத்து பயிற்சியில் ஈடுபட்டிருக்கின்றனர்.

தினமும் இந்தப் பயிற்சி முகாமில் பெருமளவான கடற்புலிகள் பயிற்சி பெற்று வருகின்றனர். இவர்களின் பயிற்சிக்கென 25 குதிரை வலுக் கொண்ட இயந்திரப் படகு ஒன்றும், ஜீப்வண்டிகள் சிலவும், உழவு இயந்திரம் ஒன்றும் இருப்பதாக, உளவுப்பிரிவினருக்கு தகவல் கிடைத் துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை - தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு வில்பத்துக் காட்டில் முன்னரும் இருபயிற்சி முகாம்கள் இருப்பதாகப் பொலிஸ் உளவுப் பிரிவுக்கு தகவல் கிடைத்ததாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இதேவேளை இந்தப் பகுதியில் மகளிர் படையணியின் முகாமும் இணைத்திருக்கிறது என்று, பொலிஸ் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

வில்பத்துக்காட்டில் உல்லாசப் பயணிகளுக்கென திறந்துவைக்கப்பட்டுள்ள பகுதிக்குச் சமீபமாகப் புலிகளின் இந்தப் பயிற்சி முகாம் அமைக்கப்பட்டிருந்தாலும், உல்லாசப் பிரயாணிகளுக்கு எந்தவித பாதிப்பும் இல்லை என்று உளவுப் பிரிவின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதேவேளை - தமிழீழ காவல்துறைக்கு ஆட்களைத் திரட்ட, காவல்துறையின் மகளிர் பிரிவு சிலாபம், உடப்பு பகுதிகளில் நடமாடி வருவதாகவும் பொலிஸ் உளவுப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.(தே)

## சிங்கள ஊடகவியலாளர்களுக்கு திருமலை நிலவரம் குறித்து விடுதலைப் புலிகள் விளக்கம்!



தென்னிலங்கையிலுள்ள தினமின, திவயின, லங்காதீப மற்றும் சா.எப்.எம். ஆகியவற்றின் ஊடகவியாளர்களுக்கும், திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலனுக்கும் இடையில் கடந்த புதன்கிழமை திருமலையில் சந்திப்பொன்று இடம்பெற்றது.

திருமலை, கிறீன் வீதியில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் கருத்து தெரிவித்த திருமலை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் -

அண்மையில் திருமலையில் இடம்பெற்ற வன்செயல்களுக்கு ஜே.வி.பியே முழுப்பொறுப்பாகும். படையினரும், பொலிஸாரும் நினைத்திருந்தால் இந்த வன்முறைகளைக் கட்டுப்படுத்தியிருக்கலாம். இராணுவம் தேவையற்ற வகையில் மக்கள் மீது தாக்குதல் நடத்திய காரணத்தாலேயே, வன்முறைச் சம்பவங்கள் வெடித்தன.

அத்துடன், படையினரின் மனநிலைகளில் இன்னமும் மாற்றம் வரவில்லை. அவர்களது மனநிலைகளில் மாற்றம் ஏற்பட்டால், இந்த நாட்டில் சமாதானம் ஏற்படுவதற்கான வாய்ப்புத் தோன்றும். தமிழ் மக்களுக்கான உரிமையைக் கொடுப்பதற்கு எவரும் தயாராக இல்லை.

திருமலையிலுள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் பொலிஸார் பெருமளவில் கடமையாற்றுகின்ற போதிலும், அங்கு பதியப்படும் முறைப்பாடுகள் அனைத்தும் சிங்கள மொழியிலேயே பதியப்படுகின்றன. எனவே, தமிழ் மொழிக்குரிய அந்தஸ்த்தை வழங்குவதற்கு எவருக்கும் விருப்பமில்லையென்பது இதன்மூலம் தெளிவாகியுள்ளது. இதற்காகவே, எமது போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

எமது போராட்டத்தின் நோக்கம் தமிழ் மக்களது விடிவுதான். எனவே, அதற்கான முடிவைக் காண்பதற்கான நிர்ப்பந்தத்தில் நாம் உள்ளோம்.

விடுதலைப் புலிகளாகிய நாம்- எமது நிகழ்வில் தேசியக் கொடியை ஏற்றியிருந்தோம். இதனை இறக்குமாறு தெரிவித்தே ஜே.வி.பியினர் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். படையினரும் அதனை இறக்க மும்முரமாக இருந்தனர்.

அத்துடன், ஊடகங்கள் செய்திகளை உண்மைக்குப் புறம்பான வகையில் வெளியிடுவதை விடுத்து, சரியான தகவலை மக்களுக்கு வழங்கவேண்டும் எனவும் கேட்டுக் கொண்டார்.

இந்தச் சந்திப்பின்போது, கருத்து தெரிவித்த ஊடகவியலாளர்கள் - வெளியிலிருந்து பார்க்கும்போது, வன்முறைச் சம்வங்களை விடுதலைப் புலிகளே புரிந்ததாக கருதினோம். ஆனால், நேரில் வந்து பார்த்த போதே இவற்றின் உண்மைத் தன்மையை அறியக்கூடியதாக இருந்தது எனத் தெரிவித்தனர்.

இந்தச் சந்திப்பின் இறுதியில் அண்மையில் இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட காட்சிகளும், விடியோப் பிரதி மூலம் ஊடகவியளாலர்களுக்கு காண்பிக்கப்பட்டது. (04,10)

## அவுஸ்ரேலியாவில் இலங்கையர்கள் மேற்கொண்ட உண்ணாவிரதம் முடிவு

தம்மைத் தாயகத்துக்குத் திருபி அனுப்பவேண்டாம் என்று கோரி தெற்கு அவுஸ்ரேலிய அகதிகள் தடுப்பு முகாமொன்றில் உண்ணாவிரதமிருந்த இலங்கையர்கள் 11 பேரும், அவுஸ்ரேலிய குடிவரவு அதிகாரிகள் கொடுத்த உறுதிமொழியை அடுத்து தமது போராட்டத்தைக் கைவிட்டனர்.

தமக்கு அகதி அந்தஸ்து தரக் கோரியும், தம்மைத் தாயகத்துக்குத் திருப்பி அனுப்பவேண்டாம் என்று கோரியும் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் தெற்கு அவுஸ்ரேலியாவிலுள்ள பக்ஸ்டர் அகதிகள தடுப்பு முகாமில் இரண்டு இலங்கையர்கள் சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டத்தில் குதித்தனர். கடந்த வாரம் மேலும் 9 இலங்கையர்கள் அவர்களது போராட்டத்தில் இணைந்து கொணடனர்.

போராட்டத்தால் உண்ணாவிரதிகளின் உடல்நிலை மோசமடைந்ததால், முதலில் நால்வரும் பின்னர் மூவரும் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். நெருக்கடி நிலையை உணர்ந்த அவுஸ்ரேலிய குடிவரவு அதிகாரிகள், பல்தேசிய சுதேச விவகாரத்துறை அதிகாரிகளை அழைத்துப் பேச்சு நடத்தினர்.

இந்தப் பேச்சுக்கள் தொடர்பாக அகதிகள் விவகாரத்துறைப் பேச்சாளர் மிரா றொபிள்ஸ்கி கூறுகையில -

இலங்கையின் நிலைமை பழையபடி மோசமாக ஆரம்பித்திருப்பதால், முகாமிலுள்ள இலங்கையர்கள் ஒவ்வொருவரையும் தனித்தனியாகச் சந்தித்து அவர்கள் தொடர்பான மீள்தயார் செய்யப்பட்ட அறிக்கையை குடிவரவு அமைச்சருக்கு அனுப்புவது என்று பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டுள்ளது.

உண்ணாவிரதிகளின் நியாயமான கோரிக்கைக்கு இணங்கி அவர்களுக்குச் சாதகமான நடவடிக்கையையே அரசு மேற்கொண்டுள்ளது.

உண்ணாவிரதிகள் சிலருக்கு நெஞ்சுவலி, வயிற்று வலி போன்றவற்றுக்கான அறிகுறிகள் தென்பட்டதாலும், சிலரது பேச்சாற்றல் மிகவும் மெதுவான மெல்லிய ஈனக் குரலில் காணப்பட்டதாலும் அவர்கள் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

மிகுதி உண்ணாவிரதிகள் அரசின் உறுதிமொழியை அடுத்து, தமது போராட்டத்தைக் கைவிடுவதாக அறிவித்தபோதும், உண்ணாவிரதத்தை முறிக்காமல் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட தமது சகாக்கள் திரும்பிவரும்வரை காத்திருக்கிறார்கள் என்று கூறினார்.

## தனியார்துறை ஊழியர்களுக்கும் ஜனவரி முதல் சம்பள உயர்வு!

தனியார்துறை நிறுவனங்களில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் அடுத்த ஜனவரி முதல் அதிகரித்த சம்பளக் கொடுப்பனவு வழங்கப்படும் என அமைச்சர் அதாவுட செனவிரத்தின தெரிவித்தார்.

இந்தமுறை சமர்ப்பிக்கப்பட்டுள்ள வரவு - செலவுத்திட்டத்தின் மூலம் தனியார் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கும் பல நன்மைகள் வழங்கப் படவுள்ளன. தனியார் பிரிவுகளின் சம்பளங்கள் தொடர்பாகச் செயற்படுகின்ற சம்பள நிர்ணய சபைகளை முழுமைப்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார். (தே)

## ஐ.தே.கவின் 50 ஆவது தேசியமாநாடு இன்று

ஐக்கிய தேசியக் கட்சியின் 50 ஆவது தேசிய மாநாடு கொழும்பில் இன்று நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு எதிர்க்கட்சி தலைவரும், ஐக்கிய தேசியக் கட்சித் தலைவருமாக ரணில் விக்கிரமசிங்க தலைமையில நடைபெறவுள்ளது.

அடுத்த தேர்தலின்போது, ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரமசிங்கவின் பெயரைச் சிபார்சு செய்தல், ஜனாதிபதி தேர்தலை 2005 ஆம் ஆண்டின் முடிவுக்குள் நடத்தவேண்டும், சுதந்திரமான தேர்தல் ஆணைக்குழுவை நியமிக்குமாறு அரசுக்கு அழுத்தம் கொடுத்தல் மற்றும் வறுமையை இல்லாது ஒழிக்க ஐக்கிய தேசியக் கட்சி மேற்கொள்ளவுள்ள புதிய வேலைத் திட்டங்கள் உட்பட ஏழு பிரேரணைகள் இதன்போது முன்மொழியப்படும் எனவும் கட்சியின் பிரதிச் செயலாளர் நாயகம் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார். (தே)

# நியூஸிலாந்து செல்லும் அணியில் ரசல் ஆர்னல்ட் மீண்டும் இணைப்பு!



(கொழும்பு)

எதிர்வரும் 26 ஆம் திகதி நியூஸிலாந்தில் ஆரம்பமாகவுள்ள ஒருநாள் போட்டித் தொடருக்கான இலங்கை அணியில் நீண்ட கால இடைவெளிக்குப் பின்னர் மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரர் ரசல் ஆர்னல்ட் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

கடந்த 6 மாதங்களாக சர்வதேசப் போட்டிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்டிருந்த ரசல் ஆர்னல்ட் உள்ளூர்ப் போட்டிகளில் காட்டிய திறமைகளையடுத்து, நியூஸிலாந்துடனான ஒருநாள் தொடரில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார்.

கடந்த ஒக்ரோபர் மாதம் இடம்பெற்ற பாகிஸ்தான் அணியுடனான ஒரு நாள் போட்டிகளிலிருந்து இடைநிறுத்தப்பட்ட திலகரட்ண டில்சான் மீண்டும் அணியில் சேர்க்கப்பட்டுள்ள அதேவேளை, ஆரம்பத் துடுப்பாட்டவீரர் அவிஸ்க குணவர்த்தன, ஜெகான் முபாரக், திலங்க கண்டம்பி, கௌசல்ய லொக்கு ஆராய்ச்சி ஆகியோர் நியூஸிலாந்துத் தொடரில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணியின் சுழற்பந்து வீச்சாளர் முத்தையா முரளிதரன் நியூஸிலாந்துத் தொடருக்கான அணியில் இடம் பெற்றுள்ள போதும் அவர் போட்டிகளில் பங்கேற்பாரா என்பது சந்தேகத்திற்கிடமாகவே உள்ளது.

நியூஸிலாந்து செல்லும் இலங்கை அணி வீரர்களின் விபரம் வருமாறு -

மாவன் அத்தப்பத்து (அணித் தலைவர்), மஹேல ஜெயவர்த்தன (துணைத் தலைவர்), குமார் சங்ககார, சனத் ஜெயசூரிய, சமிந்த வாஸ், திலகரட்ண டில்சான், ரசல் ஆர்னல்ட், சமன் ஜெயந்த, உபுல் சந்தன, நுவான் சொய்சா, பர்வேஸ் மஃரூப், டில்கார பெர்னாண்டோ, நுவான் குலசேகர, ரங்கன ஹேரத், முத்தையா முரளிதரன்.

## இன்று முதல் ஒருநாள் போட்டி

நியூஸிலாந்து கிரிக்கெட் அணி அவுஸ்ரேலியாவில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும் தோற்று நியூஸிலாந்து அணி தொடரை இழந்தது.

அவுஸ்ரேலியா - நியூஸிலாந்து அணிகள் இடையேயான 3 ஒருநாள் போட்டித் தொடரில் முதல் ஆட்டம் மெல்பேர்னில் இன்று நடைபெறவுள்ளது.

# அவுஸ்ரேலிய உள்ளூர் போட்டி; பாகிஸ்தான் அணி தோல்வி!

(சிட்னி)

அவுஸ்ரேலிய உள்ளூர் அணியுடன் நடந்த 3 நாள் போட்டியில் பாகிஸ்தான் அணி தோல்வியுற்றது.

இன்ஸமாம் தலைமையிலான பாகிஸ்தான் கிரிக்கெட் அணி டெஸ்ட் மற்றும் ஒருநாள் போட்டியில் மோதுவதற்காக அவுஸ்ரேலியா சென்றுள்ளது. இதன் முதற்கட்டமாக அவுஸ்ரேலிய உள்ளூர் அணியுடன் பாகிஸ்தான் 3 நாள் போட்டியில் மோதியது.


இதில் பாகிஸ்தான் 10 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியுற்றது. முதல் இனிங்ஸில் அவுஸ்ரேலிய லெவன் 158 ஓட்டங்களும், பாகிஸ்தான் 257ஓட்டங்களும் எடுத்தது. பின்னர் அவுஸ்ரேலிய லெவன் 192 ஓட்டங்கள் பெற்றது. இத்னையடுத்து



94 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் பாகிஸ்தான் அணி இருந்தது.

ஆனால், முன்னணி வீரர்கள் அனைவரும் வரிசையாக அடுத்தடுத்து ஆட்டமிழந்தனர். இதனால், பாகிஸ்தான் 83 ஓட்டங்களில் சுருண்டது.

# தென்னாபிரிக்காவுடனான டெஸ்ட் துடுப்பாட்டத்தில் ஷேவாக் முன்னணி!




தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் வீரேந்தர் ஷேவாக் அதிக ஓட்டங்கள் குவித்து துடுப்பாட்டத்தில் முதல் இடத்தைப் பிடித்தார். பந்து வீச்சில் ஹர்பஜன் முன்னிலையில் உள்ளார்.

இந்தியா தென்னாபிரிக்கா இடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட்தொடர் கடந்த வியாழன் முடிவடைந்தது. இதில் இந்திய அணி 1:0 என்ற முன்னிலையில் கிண்ணத்தைக் கைப்பற்றியது. இந்தத் தொடரில் இந்திய வீரர்களின் ஆதிக்கமே அதிகம் காணப்பட்டது.

துடுப்பாட்டத்தில் ஷேவாக் 262 ஓட்டங்கள் குவித்து முதல் இடத்தைக் கைப்பற்றியுள்ளார். இவர் கான்பூரில் நடந்த முதல் போட்டியில் ஒரு சதமும் கொல்கத்தாவில் அரைச்சதமும் விளாசியுள்ளார். மேலும் ஒரே இனிங்சில் அதிக ஓட்டங்கள் (164) குவித்த வீரரும் இவர்தான்.

தென்னாபிரிக்காவின் கலிஸ் 241 ஓட்டங்களுடன் இரண்டாவது இடத்திலுள்ளார். இவர் கொல்கத்தா போட்டியின் முதல் இனிங்சில் சதமும் இரண்டாவது இனிங்சில் அரைச் சதமும் அடித்துள்ளார். கடந்த சில போட்டிகளாக 'மாஸ்டர் பட்ஸ்மன்' சச்சின் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்து வருகிறார். இவரது மோசமான நிலை இந்தத் தொடரிலும் நீடித்தது.

சச்சின் மொத்தமாக 55 ஓட்டங்கள் மட்டுமே எடுத்துள்ளார். இதில் கொல்கத்தாவில் இவர் இரண்டாவது இனிங்சில் அதிக



பட்சமாக ஆட்டமிழக்காமல் 32 ஓட்டங்கள் அடித்துள் ளார்.

சுழற் கூட்டணிப் பந்துவீச்சில் ஹர்பஜன் சிங், கும்ளே அபாரமாகச் செயற்பட்டுள்ளனர். ஹர்பஜன் 13 விக்கெட்டுக்களுடன் முதல் இடத்தையும், கும்ளே 10 விக்கெட்டுக்களுடன் இரண்டாவது இடத்தையும் பிடித்துள்ளனர். தென்னாபிரிக்க தரப்பில் அதிகபட்சமாக என்ரினி 8 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியுள்ளார். அனுபவ வீரரான ஷோன் பொலக் வீழ்த்தியதோ 4 விக்கெட் மட்டும் தான். இந்த அணியின் இளம் வீரர்கள் சோபிக்கத் தவறினர். அறிமுக வீரரான டி புரூன் மட்டுமே 130 ஓட்டங்களும் 3 விக்கெட்டையும் கைப்பற்றி ஆறுதல் அளித்துள்ளார்.

# டெஸ்ட் தரவரிசையில் ராவிட் முதலிடத்தில்!



இந்திய - தென்னாபிரிக்க அணிகள் இடையேயான டெஸ்ட தொடர் சமீபத்தில் நடைபெற்றது.

இதன் அடிப்படையில் வீரர்களின் வரிசைப் பட்டியலை பிரைஸ் வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது.

இதன்படி, துடுப்பாட்டத்தில் இந்திய வீரர் ராகுல் ராவிட் 878 புள்ளிகள் பெற்று முதல் இடத்திலுள்ளார்.

இதேபோல் தென்னாபிரிக்கத் தொடரில் அபாரமாக ஆடிய மற்றொரு இந்திய வீரர் வீரேந்தர் ஷேவாக் 856 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்தில் உள்ளார். மேற்கிந்தியத் தீவுகள் அணித் தலைவர் பிரைன் லாரா 845 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்தைப் பிடித்தார்.

கலிஸ் (தென்னாபிரிக்கா) 4 ஆவது இடத்திலும், மத்தியூ ஹைடன் (அவுஸ்ரேலியா) 5 ஆவது இடத்திலும், ரிக்கிபொண்டிங் (அவுஸ்ரேலியா) 6 ஆவது இடத்திலும், இன்சமாம் (பாகிஸ்தான்) 7 ஆவது இடத்திலும், டேமியன் மார்ட்டின் (அவுஸ்ரேலியா) 8 ஆவது இடத்திலும், சங்ககார (இலங்கை) 9 ஆவது இடத்திலும், கிப்ஸ் (தென்னாபிரிக்கா) 10 ஆவது இடத்திலும் உள்ளனர்.

பந்துவீச்சாளர்களில் இங்கிலாந்து வீரர் ஹர்மிசன் 875 புள்ளிகள் பெற்று முதலிடத்திலுள்ளார், முரளிதரன் 850 புள்ளிகள் பெற்று 2 ஆவது இடத்திலும், மக்ரா (அவுஸ்ரேலியா) 835 புள்ளிகள் பெற்று மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

சொகைப் அக்தர் (பாகிஸ்தான்) 4 ஆவது இடத்திலும், பொலக் (தென்னாபிரிக்கா) 5 ஆவது இடத்திலும், ஜிலெஸ்பி (அவுஸ்ரேலியா) 6 ஆவது இடத்திலும், கும்ளே (இந்தியா) 7 ஆவது இடத்திலும், வோன் (அவுஸ்ரேலியா) 8 ஆவது இடத்திலும், ஹர்பஜன் சிங் (இந்தியா) 9 ஆவது இடத்திலும், என்ரினி (தென்னாபிரிக்கா) 10 ஆவது இடத்திலும் உள்ளனர்.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான தொடரை இந்தியா 1:0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இதனால், ஐ.சி.சி. தர வரிசைப் பட்டியலில் இந்தியா 107 புள்ளிகள் பெற்று 3 ஆவது இடத்துக்கு முன்னேறியுள்ளது. அவுஸ்ரேலியா முதலிடத்திலும், இங்கிலாந்து 2 ஆவது இடத்திலும் உள்ளன.

பாகிஸ்தான், இலங்கை, தென்னாபிரிக்கா, நியூஸிலாந்து, மேற்கிந்தியத் தீவுகள், சிம்பாப்வே, பங்களாதேஷ் ஆகிய நாடுகள் முறையே 4 தொடக்கம் 10 ஆவது இடங்களில் உள்ளன.




ஆன்ரூ ரொடிக்கை டேவிஸ் கிண்ண ஒற்றையர் ஆட்டத்தில் ஒரு போட்டியில் தோற்கடித்த பின்னர் நிலத்தில் வீழ்ந்து மகிழ்ச்சியை கொண்டாடுகிறார் ஸ்பெயின் வீரர் ரபேல் நடால்.




டேவிஸ் கிண்ண ரெனிஸ் போட்டியில் இரண்டாவது ஆட்டத்தில் உலகின் இரண்டாம் நிலை ஆட்டக்காரர் அன்ரூ ரொடிக் ஸ்பெயின் வீரர் ரபேல் நடாலிடம் தோல்வியடைந்த பின்னர்.

## விளையாட்டு

# நெடுந்தீவில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள்

நெடுந்தீவு பிரதேச மட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையே இந்த மாத நடுப்பகுதியில் பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகள் நடைபெற ஏற்பாடுகள் இடம்பெற்று வருகின்றன.

சைக்கிளோட்டம் (ஆண்/பெண்), மரதன் ஓட்டம்(ஆண்/பெண்), குதிரையோட்டம் (ஆண்), நீச்சல் (ஆண்), மாட்டுவண்டிச்சவாரி (ஆண்) ஆகிய பாரம்பரிய விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன.

இது தொடர்பாக நெடுந்தீவு பிரதேச கழகங்களுக்கு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டு, பங்குபற்றலுக்கான விண்ணப்பப்படிவங்களும் வழங்கப்பட்டுள்ளன. விண்ணப்பங்கள் யாவும் பூர்த்தி செய்யப்பட்டு எதிர்வரும் 14 ஆம் திகதிக்கு முன்னர் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் ஒப்படைக்கப்படவேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (113)

# சுவீடன் பேராசிரியர் பீற்றர் ஷல்க்கின் விரிவுரைகள் யாழ்.பல்கலையில் !

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக கலைப் பீடத்தின் ஏற்பாட்டில் சுவீடன் உப்சாலா பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த பேராசிரியர் பீற்றர் ஷல் - நாளை முதல் ஜனவரி 7 ஆம் திகதி வரை ஒன்பது தலைப்புக்களில் தொடர் விரிவுரைகளை ஆற்றவுள்ளார்.

இந்த விரிவுரைகள் யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் பிற்பகல் 3.00 மணி முதல் 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது.

புலம்பெயர்ந்தோர் மதப் பாரம்பரியத்தைப் பேணுதல், வரலாற்றுக் காலத்தில் தமிழரிடையே நிலவிய புத்தமதக் கொள்கைகள், ஈழத்தமிழும் புத்த மதமும், ஈழம் என்பதன் கருத்தும் பழந்தமிழ் இலக்கியங்களில் இந்தச் சொல் பரவி வருதலும், வேதத்தில் புதிய கண்டுபிடிப்புக்கள், மதம் பற்றிய கொள்கைகள், மதமும் மார்க்சிசமும், சுவீடன் முதல்-வட்டுக்கோட்டை வரை ஆகிய தலைப்புகளில் விரிவுரைகள் இடம்பெறவுள்ளன.

ஆங்கில மொழியில் இடம்பெறவுள்ள இந்த விரிவுரைகளுக்குச் சமகால தமிழ் மொழிபெயர்ப்பு வழங்கப்படும்.

எண்பது வீத விரிவுரைகளுக்குச் சமூகமளித்தோருக்கு, பங்குபற்றியவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கப்படும்.

பல்கலைக்கழக துறைசார் அறிஞர்களின் தலைமையின் கீழ் இடம்பெறவுள்ள விரிவுரைகளின் இறுதியில் கலந்துரையாடல் இடம்பெறும்.

சைவ அபிமானிகள், மாணவர்கள், ஆர்வமுள்ள பொதுமக்கள் இந்த விரிவுரைத்தொடருக்கு வருகை தந்து பயன் பெறலாமென கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரன் தெரிவித்தார்.

## குன்றும் குழியுமாகவுள்ள யாழ் -பருத்தித்துறை வீதி

(பருத்தித்துறை)

யாழ் - பருத்தித்துறை வீதி நீண்டகாலமாக குன்றும், குழியுமாக இருப்பதால், போக்குவரத்துக்கு மிகவும் சிரமமாக இருப்பதாகவும், இதனால் வீதி விபத்துக்கள் இடம்பெறுவதாகவும் என்றும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

(வ)

## விழிப்புணர்வுக் கூட்டம்

கிராமிய மட்டத் தலைவர்கள் கலந்துகொள்ளும் கூட்டம் - எதிர்வரும் 10 ஆம் திகதி பிற்பகல் 2 மணிக்கு யாழ்.பிரதேச செயலகத்தில், பிரதேச செயலர் தலைமையில் இடம்பெறவிருக்கிறது.

மனித உரிமைகள் ஆணைக்குழுவின் அனுசரணையுடன் நடைபெறவுள்ள இந்தக்கூட்டத்தில், மனித உரிமைகள் தொடர்பாக ஆராயப்படவுள்ளன. (த)

## நெடுந்தீவு கடற்தொழிலாளருக்கு இயந்திரம் திருத்தும் பயிற்சி

(நெடுந்தீவு)

நெடுந்தீவில் பட்டினிக்கெதிரான நிறுவனத்தினர் நடத்திய கடற்தொழில் பயிற்சி மற்றும் வெளியிணைப்பு இயந்திரம் திருத்தும் பயிற்சிகள் - கடந்த மூன்று தினங்களாக நெடுந்தீவில் இடம்பெற்றன.

நெடுந்தீவு கடற்தொழிலாளர் சங்கக் கட்டடத்தில் தெரிவுசெய்யப்பட்ட 30 இளைஞர்களுக்கே இந்தப் பயிற்சியளிக்கப்பட்டது.

பயிற்சியாளர்களுக்கான மதிய உணவு, தேனீர் என்பனவும் இந்த நிறுவனத்தினரால் வழங்கப்பட்டது.

இதேவேளை, பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் வறுமைக்கோட்டுக்குள் வாழும் ஒரு தொகுதி குடும்பங்களுக்கு கோழிக்குஞ்சுகள் வழங்கப்பட்டுள்ளதுடன், ஏற்கனவே கோழிக்குஞ்சு பெற்றவர்களுக்கு கோழித்தீன் வகைகளும் வழங்கப்பட்டன.

(113)

## சிசு உதான சேமிப்புக் கணக்கில் தெரிவான இளம் சாதனையாளர்



(யாழ்ப்பாணம்)

மக்கள் வங்கியில் சிசு உதான சேமிப்புக் கணக்கின் சிறப்பு நிகழ்வாக, இளம் சாதனையாளர்கள் தெரிவில் யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த ஐந்து பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

குமாரவடிவேல் குருவரன், கதிரேசப்பிள்ளை தர்சனா, சுகன்யா சந்திரபாலன், ஜீவிதா விவேகானந்தன், ஜேசுதாசன் நியுமன் ஆகியோரே இளம் சாதனை வீரர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களுக்கான பரிசில் வழங்கும் நிகழ்வு - எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

தெரிவு செய்யப்பட்டவர்கள் கடந்த மூன்று மாதங்களுக்கு முன்னர், சிசு உதான கணக்கில் இணைத்திருப்பின். பரிசு இரட்டிப்பாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

# மின்னிணைப்புக்கு நிதி ஒதுக்கியும் பணிகள் இதுவரை ஆரம்பிக்கவில்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பிரதேச மின்சார விஸ்தரிப்புக்கென பெருமளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதும், அதற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுக்காமையால், மின் விநியோகத்தை எதிர்பார்த்திருக்கும் மக்கள் பெரும் ஏமாற்றமடைந்துள்ளனர்.

நெடுந்தீவு மேற்கு, மத்தி, கிழக்கு பகுதிகளுக்கென சுமார் 15 லட்சம் ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளபோதும், இந்த வேலையை நிறைவேற்றாமல், இழுத்தடிக்கின்ற செயற்பாடு தொடர்கிறது.

குறிப்பிட்டளவான குடும்பங்களுக்கு மாத்திரம் மின் வழங்கப்பட்டு, குறைந்த வருமானத்துடன் கூடிய ளவு செலவில் மின் விநியோகமே தற்போது நெடுந்தீவில் மேற்கொள்ளப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

மின்சார இணைப்புக்களைப் பெற்றுக்கொள்ள உரிய அதிகாரிகளும், நிர்வாகத்தினரும் நடவடிக்கை எடுக்கவேண்டுமென மின்சாரத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கும் மக்கள் தெரிவித்தனர். (113)

# குடாநாட்டில் 385 வீடுகள் அமைக்க 16 மில்லியன் ரூபா வழங்கப்பட்டது

யாழ்.மாவட்ட வீடமைப்பு அதிகார சபை - இந்த வருடம் 385 வீடுகளை அமைப்பதற்கு, 16 மில்லியன் ரூபாவை கடன் அடிப்படையில் வழங்கியுள்ளது என, வீடமைப்பு அதிகார சபையின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இதைவிட, யாழ்.மாவட்டத்தில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களில், தெரிவுசெய்யப்பட்ட 56 குடும்பங்களுக்கு - இலவசமாக 85 ஆயிரம் ரூபா பெறுமதியான கூரைத தகடுகள் வழங்கப்பட்டன.

கடந்த இருபது வருடங்களின் முன் நல்லூர், வேலணை, பருத்தித்துறை போன்ற பகுதிகளில் கடன் அடிப்படையில் புதிதாக அமைத்துக் கொடுக்கப்பட்ட வீடுகளில், கடனை முழுமையாகச் செலுத்திய 84 பயனாளிகளுக்கு வீட்டின் உரிமைப் பத்திரம் இந்த வருடம் வழங்கப்பட்டுள்ளது வீடமைப்பு அதிகார சபையின் 25 ஆவது ஆண்டு நிறைவு தினத்தை முன்னிட்டு, சண்டிலிப்பாய் பகுதியில் வீடு ஒன்றை இலவசமாகக் கட்டிக்கொடுக்கவுள்ளதாகவும் அவா மேலும் தெரிவித்தார்.

## கூடிய விலையில் கறுப்புச்சந்தையில் கோதுமை மா

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டுக்கு கோதுமை மாவை வழங்கும் பிறிமா நிறுவனத்தின் கோட்டா முடிவடைந்ததை அடுத்து, கோதுமை மாவுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இதைப்பயன்படுத்தி, சில தனியார் கடைகளில் ஒரு கிலோ கோதுமைமா 30 ரூபா முதல் 32 ரூபா வரை விற்கப்படுகிறது. (72)

## இந்து மகளிர் கல்லூரியில் சைவநெறி விழா

சைவநெறி விழா - எதிர்வரும் 12 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை யாழ்.இந்து மகளிர் கல்லூரியின் விசாலாட்சி மண்டபத்தில், பிற்பகல் 2 மணிக்கு யாழ்.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.விக்கினேஸ்வரன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக நேச்சர் லங்கா உல்லாசப் பிரயாண தனியார் நிறுவன முகாமையாளர் விஜயகுமாரும், சிறப்பு விருந்தினராக தாவடியூர் தேவார இசைமணி கலாபூஷணம், இராசையா திருஞானசம்பந்தன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.

இங்கு சிறப்பு நிகழ்வாக - பேச்சு, பண்ணிசை, சகலகலா வல்லிமாலை ஓதல் என்பனவும், வலய மட்டத்தில் நடத்தப்பட்ட சைவநெறி போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெற்றவர்களுக்கு பரிசில்கள் வழங்கவுள்ளனர். (வ), (தீ)

# பருத்தித்துறை வைத்தியசாலையை தரமுயர்த்துமாறு மக்கள் கோரிக்கை

(பருத்திதுறை)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையை, தள வைத்தியசாலையாகத் தரமுயர்த்துமாறு வடமராட்சி மக்கள் முன்வைத்த கோரிக்கைக்கிணங்க, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம் - சுகாதார அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவைச் சந்தித்துப் பேசியுள்ளார்.

அத்துடன் தளவைத்தியசாலையாகத் தரமுயர்த்துவதற்கான, வைத்தியர் பற்றாக்குறையை நீக்குதல், கட்டட, தளபாட வசதிகளை ஏற்படுத்துமாறும் எம்.கே.சிவாஜிலிங்கம் சுகாதார அமைச்சிடம் கோரியுள்ளார்.

இதற்குப் பதிலளித்த சுகாதார அமைச்சர் - இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் உறுதியளித்தார்.

நீண்ட நிலப்பரப்பைக்கொண்ட வடமராட்சிப் பிரதேசத்தின் வைத்தியத்தேவைகளை நிறைவேற்ற, பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை போதுமானதாக இல்லை என பதும் குறிப்பிடத்தக்கது.

(14)

## சங்கீத சபை பரீட்சையை வெளிநாட்டிலும் நடத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வடஇலங்கை சங்கீதசபை பரீட்சையை, புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மாணவர்களுக்கு நடத்துவதற்கு தமிழீழக் கல்விக்கழகம் ஏற்பாடு செய்துவருகிறது.

இந்தப் பரீட்சையில் சங்கீதம், வீணை, நடனம், மிருதங்கம், ஆகிய பாடங்கள் நடத்தப்படவுள்ளதாக - கல்விக்கழக யாழ்.வலயப் பணிப்பாளர் தெரிவித்தார். (2)

## தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

உபதபாலகங்களுக்கு தொலைபேசி இணைப்பு பெறுவதற்கு, ரெலிக்கொம் நிறுவனத்திடம் 2003 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் பணம் செலுத்தப்பட்ட போதிலும், இன்னமும் தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவில்லை.

இதனால் அளவெட்டி, கைதடி, கொடிகாமம், பண்டத்தரிப்பு, சுழிபுரம், ஊர்காவற்துறை, ஆகிய உபதபால் அலுவலகங்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தபாலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(வ)

# மிதிவெடிகள் அகற்றும் போது வெள்ள வாய்க்கால் மூடப்பட்டது

## பொதுமக்கள் விசனம்

'ஹலோட்ரஸ்ட்' நிறுவனத்தினர் காக்கைதீவில் கண்ணிவெடி அகற்றும் பணியை மேற்கொண்டபோது, அங்குள்ள பிரதான நீரோட்ட வாய்க்கால் மூடிவிட்டதாக, அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்தனர்.

இதனால் அங்குள்ள மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

நீரோட்ட வாய்க்காலில் இருக்கும் மண்ணை அகற்றும்படி, மாநகர சபை சுகாதாரப் பிரிவு ஊழியர்கள் கேட்டுக்கொண்ட போதிலும், ஹலோட்ரஸ்ட் பணியாளர்கள் மறுப்புத் தெரிவித்தனர்.

இதனால் மாநகரசபை இது தொடர்பாக - ஹலோரெஸ்ட் நிறுவனத்திடம் நேரடியாக தொடர்புகொள்வதற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக, மாநகரசபை ஆணையாளர் குணராசா தெரிவித்தார்.

(வ)


இனிய பிறந்தநாள் வாழ்த்துக்கள்

அகவை ஒன்று



பெயர் : மோ.ஆதீஸ்
முகவரி : கல்வியங்காடு.

அகவை மூன்று



பெயர் : சு.தரண்யா
முகவரி : கோண்டாவில்.

அகவை ஆறு



பெயர் : ப.அருள்ராஜ்
முகவரி : சுன்னாகம்.

வாழ்க வளமுடன்




சிறாரின் பெயர் :
முகவரி :
பிறந்த ஆண்டு:
கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.
பெற்றோர் ஒப்பம்

# விளையாட்டு அரங்கம்



## திருத்தி எழுதிய தீர்ப்புகள்



இந்திய கிரிக்கெட் சபையின் பவளவிழாவை முன்னிட்டு கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் போட்டியில் பாகிஸ்தானுக்கெதிராக இந்திய அணித்தலைவர் கங்கூலி, வேண்டுமென்றே குறித்த நேரத்தைவிடத் தாமதித்துப் பந்துவீச்சை நீடித்ததாகத் தெரிவித்து அவருக்கு 2 டெஸ்ட் போட்டிகளில் விளையாட ஐ.சி.சி உடனடியாகவே தடைவிதித்தது.

இந்தத் தடைவிதிப்புக்கான பரிந்துரையை அந்தப் போட்டியின் போட்டி நடுவராகக் கடமையாற்றிய கிளைவ் லொயிட் செய்திருந்தார்.


ஆனாலும் கங்கூலியும், இந்திய கிரிக்கெட் சபையும், ஐ.சி.சிக்கு அப்பீல் செய்ததையடுத்து கங்கூலி மீதான தற்காலிகத் தடை நீக்கப்பட்டு, தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாட அனுமதிக் கப்பட்டார்.

ஆனாலும், இது தொடர்பாக ஐ.சி.சியால் நியமிக்கப்பட்டவர் நியூசிலாந்தைச் சேர்ந்த ரிம்கேஷில். கங்கூலி, மீதும் மற்றையவர்கள் மீதும் நடத்திய விசாரணையில், கடும் பனியும், வீரர்களின் காயமுமே பந்துவீச்சுத் தாமதப்பட்டதற்கான காரணம் எனத் தெரிவித்ததையடுத்து கங்கூலி மீது விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டதாக ஐ.சி.சி அறிவித்துள்ளது.

இதில் நாம் கேட்க விரும்புவது என்னவென்றால் வீரர்களுக்குத் தண்டனை விதிப்பதற்கு முன்னிற்கும் ஐ.சி.சி, அவர்களது நலன்களைக் கவனிப்பதில் அதிக அக்கறை எடுக்காமல் இருப்பதற்குக் காரணம் தான் என்ன?

மைதானத்தில் நடுவர்கள் ஆட்டமிழப்புத் தொடர்பாகத் தமக்குச் சந்தேகம் ஏற்பட்டால் மூன்றாவது நடுவரிடம் கேட்டே தமது முடிவை அறிவிப்பர்.

அதுபோலவே வீரர்களின் நடவடிக்கைகள் குறித்தும் ஐ.சி.சி தீர விசாரணை செய்த பின்னர் நடவடிக்கை எடுத்தால் என்ன? தற்போது கங்கூலிக்கு வழங்கப்பட்ட தீர்ப்பானது நீக்கப்பட்டிருப்பதானது ஐ.சி.சியின் தீர்ப்பானது தோல்வியில் முடிவடைந்ததை எடுத்துக்காட்டுகின்றதல்லவா?



கிளைவ் லொயிட்

இதுபோலவே இலங்கையின் சுழற்பந்து வீச்சாளர் முரளிதரன் தூஸ்ரா பந்து வீச்சை மேற்கொண்டபோது அது, பந்து வீச்சு முறைக்கு முரணானதென அவுஸ்ரேலிய நடுவர் ஒருவர் அறிவிக்க, முரளியை அவுஸ்ரேலியாவுக்கு அழைத்த ஐ.சி.சி அவரைப் பரிசோதித்ததுடன் அவரது தூஸ்ரா பந்து வீச்சுக்கும் தடைவிதித்தது.

ஆனாலும் தனது கையானது பிறப்பிலிருந்தே இயல்பான வளைவைக் கொண்டிருந்தது என்று கூறிய முரளியின் கருத்தையும் ஐ.சி.சி கவனத்தில் எடுக்கவில்லையென்பதையும் இங்கே குறிப்பிட வேண்டும்.

இந்த நிலையில் ஐ.சி.சி தற்போது பந்து வீச்சாளர்கள் 15 பாகை கையை மடித்துப் பந்து வீசலாம் என அறிவித்துள்ளது. இதன்மூலம் முரளியின் தூஸ்ரா பந்து வீச்சுக்கு இருந்த தடையும் நீக்கப்பட்டுள்ளது. இது முரளி மீது மேற்கொண்ட பரிசோதனைகள் வேண்டுமென்றே மேற்கொள்ளப்பட்டதென்பது எவருக்கும் சொல்லாமல் விளங்குவதுடன் இதிலும் ஐ.சி.சியின் நடவடிக்கை தோல்வியில்தான் முடிவடைந்துள்ளது என்று கூறலாம்.

இந்த நிலையில் நியூசிலாந்துக்கெதிரான முதல் டெஸ்டில் ஜேக்கப் ஓரமை ஆட்டமிழக்கச் செய்யும் வகையில் ஷேன்வோன் வீசிய பந்து முறையற்றதெனப் பாகிஸ்தான் நடுவரான அலீம்தார் அறிவித்தார். அவ்வாறெனில் இதேபோன்று பந்து வீச்சை ஷேன்வோன் இனிவரும் காலங்களில் மேற்கொண்டால், இவர் மீது ஐ.சி.சி என்ன பிழையான நடவடிக்கையை எடுக்கப் போகின்றது?

-யசோ.


## இது என்ன சோதனை

முரளிதரன் தனது தூஸ்ரா பந்துவீச்சைத் தொடர முடியும் என்று ஐ.சி.சி அனுமதித்தது ஒரு புறம் இருக்க, சர்வதேச ரீதியாக முறையற்ற பந்து வீச்சுத் தொடர்பாக பழைய தோம்பு கிளறும் பணியொன்று திடீரென்று எதிர் பாராமல் வெடித்துக் கிளம்பியுள்ளது. அதன் தொடர்பில் மறுத்தான்களும் எழும்ப ஆரம்பித்து விட்டது.



றிச்சட் ஹெட்லி
ஹீரோ

நியூசிலாந்தின் சேர்.றிச்சட் ஹெட்லி, அவுஸ்ரேலியாவின் டெனிஸ் லிலி, பாகிஸ்தானின் இம்ரான் கான் ஆகியோர் ஏறத்தாழ சமகாலத்தில் உலகின் முன்னணி வேகப் பந்து வீச்சாளர்கள். இப் பொழுது திடீரென்று ஐ.சி.சி இவர்கள் மீது எகிறி எழும் பந்தொன்றை பிரெட்லீயின் வேகத்தில் வீசி இருக்கிறது. அதாவது இவர்களின் பந்து வீச்சும் சில சந்தர்ப்பங்களில் முறை தவறிய பந்து வீச்சுத்தான் என்று கூறுயிருக்கிறது. இந்த மூவரும் ஓய்வு பெற்றுக் கனகாலமானாலும் ரசிகர்கள் மத்தியில் என்றுமே விதந்து பேசப்பட்டுக் கொண்டிருப்பவர்கள். எண்பதுகளில் நியூஸிலாந்துக்காக விளையாடியவர் விக்கெட் காப்பாளர் இயன் ஸ்மித். இவர் கருத்துக் கூறும் போது - பல்வேறு உலக அணிகள் அறிவிக்கப்பட்டபோது தவறாது இடம் பெற்றவர்கள் இவர்கள். இவ்வளவு காலமும் புகழின் உச்சியில் தூக்கிவைத்துவிட்டு இப்போது சேற்றை வாரிப் பூசியிருப்பது அவர்களுக்கு எத்தகைய அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கும் என்று விசனப்படுகிறார். இந்த மூவருடன் ஐ.சி.சியின் பட்டியல் நின்று விடவில்லை. இங்கிலாந்தின் பிரெட் ட்ருமன், இயன் பொதம் ஆகியோரும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட்டுள்ளார்கள். இந்த வரிசையில் தற்போது களத்தில் நிற்கும் பல பந்து வீச்சாளர்களும் அடக்கம் என்றாலும்த பழையவர்கள் பற்றி ஐ.சி.சி ஏன் முந்திரிக் கொட்டைத் தனமான அபிப்பிராயத்தை முன்வைத்திருக்கிறது என்று புரிய வில்லை.



டெனிஸ் லிலி
முதல்வன்

பழைய பந்து வீச்சாளர்கள் கிரிக்கெட் ஆட்டத்தில் மிகுந்த அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவர்கள். இப்படியிருக்க ஏன் இந்த அபிப்பிராயம் என்பது புரியவில்லை. சிலவேளை ஐ.சி.சி தனது அதிகாரத்தைப் பின்னோக்கிச் செலுத்தியும் பார்க்கிறதோ என்னவோ தெரியவில்லை.

– மகடலின்.


## திரும்பிப் பார்க்கும் துணிவு உண்டு

கடந்த வாரத்தில் முன்னாள் புகழ்வாய்ந்த பந்து வீச்சாளர்களும் ஏதோவொரு சந்தர்ப்பத்தில் பந்தினை எறிந்துதான் இருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டு எழுந்ததும் அதன் தொடர்பில் பல வாக்குவாதங்கள் எழுந்ததும் ரசிகர்கள் அறிந்ததே. ஆனால் சர்ச்சையில் சம்பந்தப்பட்ட ஒருவர் இதை எவ்வாறு அணுகியுள்ளார் என்பது விளையாட்டின் மகத்துவத்தைக் காட்டுவதாக உள்ளது.

நான் விளையாடிய காலத்தில் இன்று காணப்படும் நவீன தொழில்நுட்ப வசதிகள் இந்தளவு உயர்வாக இருக்கவில்லை. இருந்தாலும் இந்த உயர் தொழில்நுட்பத்தை எனது பந்து வீச்சுப் பாணியில் பரீட்சித்துப் பார்க்க ஆவலாக இருக்கிறேன் என்று பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவரும் வேகப் பந்துவீச்சாளருமான இம்ரான் கான் கூறியுள்ளார். எனது பந்து வீச்சுப் பாணி எப்பொழுதும் சரியானதாகவே இருந்தது என்றே நான்நம்பிக் கொண்டிருந்தேன். இன்றைய நிலையில்த எந்தளவு முழங்கை வளையலாம் என்ற வரையறைகளும், சரி பிழைகளும் துல்லியமாகக் கணக்கிடப்படுகின்ற நிலையில் எனது முன்னைய பந்துவீச்சுப் பாணிபற்றி அறிந்து கொள்வது சுவாரஸ்யமானதாகவே இருக்கும் என்று நம்புகிறார் அவர்.

முறையற்ற பந்துவீச்சுப் பற்றிக் கருத்துக்கூறிய ICC குழுவில் அங்கம் வகித்தவர்கள் அனைவரும் முன்னாள் பிரபல கிரிக்கெட் வீரர்கள். இந்தக் குழுவின் தலைவர் முன்னாள் தென்ஆபிரிக்க அணியின் விக்கெட் காப்பாளர் டேவ் ரிச்சட்சன். ஏனையோரில் சுனில் கவாஸ்கர். அரவிந்த டீ சில்வா, இங்கிலாந்தின் முன்னாள் வேகப் பந்துவீச்சாளர் அங்குஸ் பிரேசர், மைக்கல் ஹோல்டிங் போன்றவர்களும் அடங்குவர்.

இம்ரான் இவர்கள் யாரையும் பற்றி எந்தவித அபிப்பிராயமும் தெரிவிக்கவில்லை. ஆனால் தன்னைப்பற்றி மதிப்பீடு செய்துகொள்ள ஆசைப்படுகிறார். மேலும் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சட்டவிதிகள் மிகச் சரியாக எல்லோருக்கும் சமம் என்றவகையில் நடைமுறைப் படுத்தப்படவேண்டும். மேலும் மைதான மத்தியஸ்தரினால் பந்துவீச்சாளரின் கை அசைவுகள் பற்றி நிர்ணயித்தல் சாத்தியமற்றது. இதைச் செம்மையாகச் செய்யக்கூடியவர் நவீன கருவிகளுடன் கூடிய தொலைக்காட்சியின் முன்னால் அமர்ந்துள்ள மூன்றாவது நடு வர் மட்டுமே. எனவே அவர் கூறுவது பெரும்பாலும் சரியாகவே இருக் கும் என்று சொல்லலாம் என்கிறார் இம்ரான்.



இம்ரான் கான்
சுதந்திரச் சிலை

தற்பொழுது இம்ரான் கான் தான் விளையாடிய காலத்து வீடியோ ஒளி நாடாக்களைத் தேடியாகவேண்டும். அதாவது விருப்பத்துக்கு இணைந்த தொழில்நுட்ப ரீதியாகவும் பகுப்பாய்வு செய்யப்படவேண்டும். இதெல்லாம் ஒருபுறம் இருக்க, பாகிஸ்தான் அணியில் இம்ரானின் காலம் முழுவதும் ஒரு முடிசூடா மன்னனின் பரிணாமத்தில்தான் இருந்தது. அவர் ஓய்வு பெற்றபின்னரும் அவரது கருத்துகளுக்குப் பாரியதொரு கனதி ஒன்றிருந்தது. இன்று இம்ரான் கான் இன்னொரு பரிணாமத்தை வெளிப்படுத்தி நிற்கிறார். எந்தவித தயக்கமுமின்றித் தனது பந்துவீச்சு முறையில் சிலவேளைகளில் பிழைகள் இருந்திருந்தால் அதற்காக வருத்தம் தெரிவிக்கும் மனப்பக்குவம் கொண்டவராகவும் இருக்கிறார். இன்றைய வர்த்தக ரீதியான சிந்தனைகளின் வயப்பட்ட விளையாட்டு வீரர்களில் இந்த உயர்ந்த பண்பைக் காண முடியுமா என்பது சந்தேகம்தான். முரளியாக இருந்தாலென்ன, ஷேன் வோனாக இருந்தாலென்ன தனக்குக் கனக்கத் தெரியும் என்ற பாணியில் தானே பேசிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் மட்டுமல்ல நேற்று சர்வதேச விளையாட்டுக் களத்துக்கு வந்த இளசுகள் கூட இம்ரானைப் பார்த்து வெட்கப்படவேண்டும். வெட்கப்படுவார்களா?

–திர்மலன்.

# காலம் கனிவது எப்போது?



சச்சின் டெண்டுல்கர்
சதங்களின் சங்கமம்

இந்திய – பங்களாதேஷ் அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டி எதிர்வரும் வியாழக்கிழமை டாக்காவில் ஆரம்பமாகவுள்ளது. அதைத்தொடர்ந்து இரண்டாவது டெஸ்ட் சிட்டகொங்கிலும் நடைபெறவுள்ளது. இந்த இரண்டு டெஸ்டிலும் எப்பாடுபட்டாவது இந்தியா வெற்றிபெறும் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை.

இதில் சச்சின், ஷேவாக், கும்ளே போன்றவர்கள் தனிப்பட்ட சாதனைகளை நிகழ்த்தினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. இதில் சச்சின் டெண்டுல்கரின் தனிநபர் சாதனைதான் அனைவராலும் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது.

டெஸ்ட் போட்டிகளில் அதிகூடிய சதங்கள் (34) அடித்த கவாஸ்கரின் சாதனையைச் சமப்படுத்த அவருக்கு இன்னும் ஒரு சதமே தேவைப்படுகிறது. ஆனால் இங்குதான் பிரச்சினை ஆரம்பமாகின்றது.

பங்களாதேஷ் தவிர டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற ஏனைய அனைத்து நாடுகளுக்கு எதிராகவும் டெஸ்ட் போட்டிகளில் சதமடித்துள்ளார் டெண்டுல்கர். இந்தத் தொடரில் ஒரு சதம் அடித்தால் டெஸ்ட் அந்தஸ்துப் பெற்ற எல்லா நாடுகளுக்கெதிராகவும் சதமடித்த ஸ்ரீவ்வோவுடனும், தென்னாபிரிக்க அணியின் முன்னாள் வீரரான ஹரி கேர்ஸ்ரனுடனும் இணைந்து கொள்வார்.

இதுவரை டெண்டுல்கர் பங்களாதேஸுடன் ஒரேயொரு போட்டியிலேயே விளையாடியுள்ளார். அதுவும் 2000 ஆம் ஆண்டு காலப்பகுதியில் டாக்கா 'வங்கபந்து' மைதானத்தில் கோலாகலமாக நடைபெற்ற பங்களாதேஸுக்கு டெஸ்ட் அந்தஸ்து வழங்கிய முதற் போட்டியிலேயே ஆகும். அந்தப் போட்டியில் அவர் 18 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

நடந்து முடிந்த தென்னாபிரிக்காவுக்கு எதிரான கொல்கத்தா டெஸ்டில் கவாஸ்கரின் சாதனையைச் சமப்படுத்துவார் என்றே பெரிதும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனாலும் துரதிஸ்டவசமாக 20 ஓட்டங்களிலேயே INSIDE EDGE ஏற்பட்டு BOWLED முறையில் ஆட்டமிழந்தார்.

இந்திய அணியின் ஆலோசகராக சுனில் கவாஸ்கர் விளங்கும் இந்த நேரத்தில், தென்னாபிரிக்க அணிக்கெதிராக இந்தச் சாதனையை நிகழ்த்தியிருந்தால் அது மிகச்சிறப்பாக இருந்திருக்கும். அங்கு தவறிப்போய்விட்டதனால் பங்களாதேஷ் தொடர் சற்று அதிகமான எதிர்பார்ப்பைத் தோற்றுவித்துள்ளது.

இருந்தபோதும் இவ்வாறான உலகசாதனை ஒன்றைப் பலம் வாய்ந்த அணியொன்றுக்கு எதிராக நிகழ்த்தியிருந்தால் நன்றாக இருந்திருக்குமென்பதே கிரிக்கெட் ரசிகர்கள் அனைவரினதும் விருப்பம்.



சுனில் கவாஸ்கர்
சாதனைத் தென்றல்

ஏனென்றால் முரளிதரன், கொட்னிவோல்ஸ் வீழ்த்திய 519 விக்கெட்டுக்களை முறியடித்து உலக சாதனை படைத்தது – தைபு தலைமையிலான குழந்தைகள் அணியிடம்தான். அப்போது சில ஊடகங்கள் 'இந்தத் தொடரிலிருந்து முரளிதரன் ஒதுங்கிக் கொள்ளாமல், அந்தப் பலம் குன்றிய அணிக்கெதிராக உலகசாதனையை நிகழ்த்திவிட்டார்' என்றுகூறி இது பற்றிச் சற்று இளக்காரம் தெரிவித்தது இங்கு மனங்கொள்ளத்தக்கது.

எனவே டெண்டுல்கரும் இந்தப் பங்களாதேஷ் தொடரில் விளையாடாமல் வளர்ந்துவரும் இளம் வீரர் ஒருவருக்கு விட்டுக் கொடுக்கலாம். ஏனென்றால் பங்களாதேஷ் அணியுடன் வேறொரு சந்தர்ப்பத்தில் சதமடித்து எல்லா நாட்டுக்கு எதிராகவும் சதமடித்த சாதனையை நிகழ்த்த அவருக்குக் காலம் இன்னும் இருக்கிறது.

இருந்தபோதும் இந்த ஆண்டு டெண்டுல்கர் டெஸ்ட் போட்டிகளில் பெற்ற ஓட்டங்களை வைத்துப்பார்த்தால் அவர் இந்தச் சாதனையைப் பங்களாதேஷ் அணியுடனாவது நிகழ்த்த முடியுமா என்றொரு சந்தேகமும் கூடவே எழுவதைத் தவிர்க்க முடியவில்லை.

இந்தவருடம் பாகிஸ்தானுக்குச் சுற்றுப் பயணம் மேற்கொண்டிருந்தது இந்திய அணி. அங்கு முல்ரானில் விளையாடிய முதற் போட்டியில் டெண்டுல்கர் ஆட்டமிழக்காமல் பெற்றது 194 ஓட்டங்கள். அந்தப் போட்டியில் இரட்டைச் சதம் அடிக்க முடியாமற் போன கசப்பான சம்பவத்தின் மன உளைச்சலில் இருந்து விடுபடமுடியாமல் உள்ளதாலோ என்னவோ, அதன் பிறகு அவர் இரட்டை இலக்கத்தை அடைவதே பெரும் திண்டாட்டமாகிவருகிறது. கடைசியாக அவர் விளையாடிய 9 டெஸ்ட் இனிங்சையும் பார்ப்போமானால் 2, 8, 1, 8, 2, 5, 55, 3, 20 என்பதிலிருந்து இது புலனாகும்.

இவ்வாறு நிலைமை மோசமாகப் போனால், கவாஸ்கரின் சாதனையை முறியடிப்பது எப்போது? டெஸ்ட் போட்டிகளில் பத்தாயிரம் ஓட்டங்களைத் தாண்டுவதுதான் எப்போது?

சேர்.டொன் பிரட்மன் டெஸ்ட் போட்டிகளில் 29 சதங்கள் பெற்ற சாதனையை, மேற்கிந்தியத் தீவுகளின் போர்ட் ஒவ் ஸ்பெயினில் அந்த நாட்டுக்கு எதிராக நடந்த போட்டியொன்றில் சமப்படுத்தி, அதனைத் தனது மறைந்துபோன தந்தைக்குச் சமர்ப்பித்த டெண்டுல்கர், இந்தச் சாதனையை எங்கே ஏற்படுத்தப் போகிறார்? அதை யாருக்குச் சமர்ப்பிக்கப் போகிறார் என்பவற்றுக்குக் காலம்தான் பதில் சொல்லும்.

– விமலன்.

# நிம்மதியா கேக் சாப்பிடுங்க

வருடா வருடம் டிசம்பர் 25 அன்று வீட்டில் இருந்து தன் குடும்பத்தினரோடு கிறிஸ்மஸ் பண்டிகையைக் கொண்டாட விரும்பாதவர் யார்? ஆனால் 2001 இன் பின் 2004 ஆம் அண்டு கிறிஸ்மஸ் கொண்டாட்டம்தான் வீட்டில் அமையப் போகிறது இவருக்கு. காரணம் அந்தளவு வேலைப்பளு. சர்வதேச வேலைப்பளு. கடந்த ஆவணிமாதத்தில் இருந்து இன்றுவரை பார்த்தால் ஜமெய்க்காவில் உள்ள தனது இல்லத்தில் இவர் கழித்த இரவுகள் பதினொன்று மட்டுமே. மற்றப்படி உலகின் பல நாடுகளிலும் இவரது பணி பரவிக்கிடந்தது. இந்த அயராத உழைப்பாளியின் பெயர் ஸ்ரீவ் பக்னர். சுடச்சுட இவர் மீதான ஒரு சர்ச்சை எழுந்துள்ள நிலையில் இவரது மறுபக்கம் ஒன்றும் தெரிகிறது. நியூசிலாந்து – அவுஸ்ரேலிய அணிகளிடையேயான முதலாவது டெஸ்ட் போட்டியில் கிறெய்க் மக்மிலனின் உள்கரைத் துடுப்பில் பட்டுப்போன பந்தை கில்கிறிஸ்ட் பிடிக்க, ஸ்ரீவ் பக்னர் அதை அவுட் இல்லை என்று சொல்ல, இதனால் கனவான் கில்கிறிஸ்ட்டும்–மக்மிலனும் சர்ச்சைப்பட, முடிந்தது முடிந்ததுதான் என்ற நிலையில் பின்னர் ஸ்ரீவ் பக்னர், தான் தவறு செய்துவிட்டேன் என்று பாவசங்கீர்த்தனம் செய்திருக்கிறார். இது பற்றிக் கூறும் போது ஒரு நடுவரின் துயரங்களை அழகாகவே எடுத்துக் கூறியுள்ளார். அந்த இடத்தில் நின்று பாருங்கள் தொழிலின் கடுமை புரியும். நாங்கள் சில செக்கன்களில் ஒருமுறைமட்டும் பார்த்துத் தீர்ப்பு வழங்குகிறோம். ஆனால், தீர்ப்பைப் பிரேத பரிசோதனை செய்பவர்கள் எவ்வளவு வசதிகளைக் கொண்டிருக்கிறார்கள் என்று பாருங்கள் என்கிறார். எல்லோரும் எங்களை ஒரு மனிதனாகப் பாருங்கள் என்று வேண்டுகோள் விடுத்துள்ளார்.



ஸ்ரீவ் பக்னர்
புன்னகை மன்னன்

நாங்கள் தனிமையில் வாழும் தொகுதி யைச் சேர்ந்தவர்கள். அன்னிய நாடுகளில் வீரர்களுக்கு ஆதரவு இருக்கும். எங்களுக்கு யாருடைய ஆதரவு? அதுவும்போக, ஹோட்டல் அறையில் தனிமை. எங்களுக்கென்று எதுவுமே இல்லை. ஆனால், கடமையே எல்லை என்று எம்மைத் தயாராகவே வைத்திருக்கிறோம் என்கிறார் ஸ்ரீவ் பக்னர்.


ஸ்ரீவ் பக்னருக்கு 58 வயதாகிறது. 95 டெஸ்ட்போட்டிகளில் மத்தியஸ்தராகக் கடமையாற்றியுள்ளார். நிச்சயம் சதம் போடுவார் என்று எதிர்பார்க்கலாம். 2007 உலகக் கிண்ணப்போட்டிகளில் மத்தியஸ்தம் வகிப்பதா? இல்லையா? என்பதைப் பற்றி இன்னமும் ஒரு முடிவுக்கும் வரவில்லை என்கிறார் அவர். அவுஸ்ரேலிய – நியூசிலாந்து டெஸ்ட் தொடர் என்று முடியும் என்று ஆவலாக இருக்கிறார் ஸ்ரீவ் பக்னர். தனது கடைசி இரண்டு பெண்பிள்ளைகளையும் காணும் அவா அவருக்கு விஞ்சியிருக்கிறது.

2004 ஆம் ஆண்டு கிறிஸ்மஸ் தினத் தன்று தனது ஏழு பிள்ளைகள் நான்கு பேர்த்திகள் என்று எல்லோரும் ஒன்று கூடி மகிழ்வுறும் சந்தர்ப்பத்தை சந்தோசமாக எதிர்கொள்ளும் தருணத்தை ஆவலாக எதிர்பார்க்கும் ஸ்ரீவ் பக்னர், தனது மத்தியஸ்த வாழ்வு மிகுந்த மகிழ்ச்சி அளித்திருப்பதாகத் தெரிவிக்கிறார். 2005 ஆம் ஆண்டின் ஆரம்பத்தில் உலகின் எங்காவது ஒரு மைதானத்தில் அந்த மாறாத புன்சிரிப்புடன் ஒருவர் நிச்சயம் கடமையாற்றிக்கொண்டிருப்பார் – அவர் வேறுயாருமல்ல ஸ்ரீவ் பக்னர் தான்.

—ஜோசப் கிருஷ்ணா.

# வொல்கா நதி பெருக்கெடுக்கிறது

FEDERATION கிண்ணத்தை ரஷ்யா இதுவரை வென்றதேயில்லை. ஆனால், இந்தமுறை வென்றிருப்பதானது, ஒரு உண்மைக்குச் சான்றாதாரமாக அமைகிறது. அதாவது ரஷ்யா ரெனிஸ் போட்டிகளில் மிகவும் முக்கியமான இடத்தை வகிப்பது மட்டுமல்ல, உலக ரெனிஸ் பொறுத்து தன்ஆதிக்கத்தையும் நிலைநிறுத்தி, ஆக்கிரமிப்பையும் பரவலாக்கி வருகின்றது என்பதே அது. இதுவே தற்போது நிரூபணமாகியுள்ளது. இறுதிப்போட்டி வரிசை யில் பிரான்சை எதிர்கொண்ட ரஷ்யா 3–2 என்றவாறு ஆச்சரியப்படத்தக்கவாறு வெற்றிபெற்றிருக்கிறது. மிகவும் எதிர்பார்க்கப்பட்டதும் நிர்ணயிக்கும் ஆட்டமாகவும் அமைந்த இந்தப்போட்டியில் ரஷ்ய ஜோடி அனஸ்ரீஷியா மிஸ்கீனாவும், வேரா சொவனரேவாவும், பிரான்சின் எமிலி லொயிட் மற்றும் மரியன் பார்டோலி இணையை 7–6, 7–5 என்ற செட் கணக்கில் அதிர்ச்சித் தோல்வி காணவைத்தனர்.



அனஸ்ரீஷியா மிஸ்கீனா
புதிய பறவை

முன்னதாக நடைபெற்ற ஒற்றையர் ஆட்டங்கள் 1–1 என்ற சமநிலையில் முடிவடைந்ததைத் தொடர்ந்து வந்த ஆட்டத்தில் மிஸ்கீனா பிரான்சின் டிஸேயை 6–3, 6–4 என்று தோற்கடித்து மொத்த வெற்றிக்கு வழிவகுத்தார்.

ஆனாலும் மறுபுறம் குளோவின் ரஷ்யாவின் US சம்பியன் பட்டம் வென்ற குஷ் நெட்சோவாவைத் தோற்கடிக்கவே பிரான்ஸ் 2–2 என்ற மொத்த ஆட்ட எண்ணிக்கையில் சமன் செய்தது. இந்த நிலையில் FEDகிண்ணம் பிரான்சுக்கா, ரஷ்யாவுக்கா என்று நிர்ணயமாவது மகளிர் இரட்டையர் ஆட்டத்திலேயே தங்கியிருந்தது. ஆனாலும், ரஷ்யாவில் மையம் கொண்ட புயல் பிரான்சின் கனவுகளைத் தகர்த்தெறிந்துவிட்டது. ரஷ்யா தனது நீண்டநாள் கனவை நனவாக்கிக் கொண்டது.ரஷ்ய வீராங்கனைகள் ஒரு சில வருடங்களாகப் புரிந்துவரும் சாதனைகள் அற்புதம். இந்த ஆண்டுத் தொடக்கத்தில் பிரஞ் ஓபன் வெற்றிக் கிண்ணம் பெற்றவர் அனஸ்டாசியா மிஸ்கீனா. இந்தப் பட்டம் வென்ற முதல் ரஷ்ய வீராங்கனையும் இவரே. அடுத்த US ஓபன் சம்பியன்ஷிப் கிண்ணத்தை தட்டிச் சென்றவர் குஷ்நெட்சோவா. மறுபுறம் விம்பிள்டன் மற்றும் மாஸ்ரர்ஸ் கிண்ணம் இரண்டையும் கைப்பற்றினார் மரியா ஷரபோவா. இந்த வரிசையில் FED கிண்ணமும் ரஷ்ய வீராங்கனைகள் வசமாகியுள்ளது. எனவே, ரெனிஸில் ஏகபோகம் என்று இதனைச் சொல்லலாமா. எதிர்வரும் வருடங்களில் ரெனிஸ் பொறுத்து அதுவும் மகளிர் ரெனிஸ் பொறுத்து சர்வதேசமும் ரஷ்யாவின் பக்கம்தான் பார்க்கப்போகிறது என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை.



வேரா சொவனரேவா
மாடப்புறா

–கோபி.

# கண்ணிவெடிஅகற்றும் பணி மாங்குளம் பகுதியில் தீவிரம்

மாங்குளம் பிரதேசத்தில் கண்ணிவெடிகள் மற்றும் வெடிபொருட்கள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட ஜெயசிக்குறு படை நடவடிக்கை மூலம் இந்தப் பகுதியை இராணுவத்தினர் ஆக்கிரமித்து, மக்கள் குடியிருப்புக்களில் பெருமளவான கண்ணிவெடிகளையும், வெடிக்கும் நிலையிலுள்ள வெடிபொருட்களையும் விதைத்து விட்டுச் சென்றுள்ளனர்.

இந்த வெடிபொருட்களால் பெருமளவான மக்கள் குடியமர முடியாத நிலையில் உள்ளதோடு, இந்தப் பகுதியில் பெருமளவானோர் வெடிபொருள் பாதிப்புக்கு உட்பட்டும் வருகின்றனர்.

இந்தப் பிரதேசத்தில் முன்னுரிமைப் படுத்தப்பட்ட இடங்களிலுள்ள வெடிபொருட்கள் அகற்றும் பணியை, மனிதநேய கண்ணிவெடி அகற்றும் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.



உடுத்துறை மகா வித்தியாலயத்தின் வகுப்பறைகளின் முன்னால் காணப்படும் முற்றத்தில் மழை வெள்ளம் தேங்கி நிற்கக் கூடிய குழிகள் காணப்படுவதை படத்தில் காணலாம்.

(21)

# தமிழர் புனர்வாழ்வுக் கழக வெளியீடாக நிழல் மூன்றாவது இதழ் வெளியானது!

(கிளிநொச்சி)

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் சமூக பொருளாதார அபிவிருத்தி இதழான 'நிழல்' வெளிவந்துள்ளது.

தமிழீழத் தேசியத் தலைவரின் சிந்தனையைத் தாங்கி வரும் இந்த இதழில் "போரால் பாதிப்புற்ற சிறுவர்களுக்கான நலத் திட்டங்களை முழுமையாக விரிவுபடுத்த தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஏற்பாடு" என்ற தலைப்பிலான செய்தியுடன், வேலணையூர் சுரேஷ் எழுதும் கிராம தரிசனத்தில் "சமாதான காலத்திலும் அகலாத அகர முகங்களும், அகதி முகாம்களும்" என்னும் கட்டுரையும், தமிழர் புனர்வாழ்வுக்கழக முகாமைத்துவ ஆலோசகர் நாகநரேந்திரனின் செவ்வியும், பொ.சத்தியமூர்த்தியின் "பாடாய்படுத்துகின்ற சிறு வீதிகள்" என்னும் கட்டுரையும் கலை மஞ்சரியின் வெள்ளைப் பிரம்பு" என்னும் சிறுகதையும் இடம்பெற்றுள்ளன.

அத்துடன் வழமையாக வெளிவரும் கணினியில் ஓர்துளி, புனர்வாழ்வுச் செய்திகள், விளையாட்டுச் செய்திகள் என்பவற்றுடன், பா.ஸ்ரீஸ்கந்தராசா எழுதிய எதிர்கால எழிலுடன் பெருமளவு சிறார் இணைவு என்னும் கட்டுரையும், நுண்கடன் திட்டம் பற்றிய விளக்கமும், வணபிதா ச.எ.றெஜினோல்ட் வழங்கிய உளவளம் பற்றிய செவ்வியின் பகுதியையும் தாங்கி இந்த இதழ் வெளி வந்துள்ளது.



வன்னிப் பதிவுகள்

# கிளிநொச்சி மாவட்டத்தில் 110 முன்பள்ளிகள் நிரந்தரக் கட்டடங்களின்றி இயங்குகின்றன

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் 110 முன்பள்ளிகள் நிரந்தரக் கட்டடங்கள் இன்றி பெரும் சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகின்றன.

இந்த மாவட்டத்திலுள்ள 156 முன்பள்ளிகளில், 46 முன்பள்ளிகள் மட்டுமே நிரந்தரக் கட்டடங்களில் இயங்குகின்றன. ஏனைய 110 முன்பள்ளிகளும் நிரந்தரக் கட்டடங்கள் இன்றி, தற்காலிக கட்டடங்களில் பெரும் சிரமங்களின் மத்தியில் இயங்கி வருகின்றன.

இந்த முன்பள்ளிகளுக்கான நிரந்தரக் கட்டடங்களை அமைப்பதற்கான நிதியை அரச, அரசார்பற்ற நிறுவனங்களிடம் முன்பள்ளி நிர்வாகத்தினர் கோரியிருந்தும் இதற்கான நிதியை வழங்குவதற்கு எந்த அமைப்புகளும் முன்வரவில்லை.

அத்துடன் இந்த மாவட்டத்தில் சேவையாற்றுகின்ற 244 முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகள் மிகவும் குறைவானதாகவே வழங்கப்பட்டு வருகின்றன.

இவ்வாறு முன்பள்ளி ஆசிரியர்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம்கொடுத்து வருவதால், இதற்கான நடவடிக்கையை எடுக்குமாறு முன்பள்ளி நிர்வாகம் சம்பந்தப்பட்டவர்களைக் கோரியுள்ளது.

# வலுவிழந்தோர் தினத்தை முன்னிட்டு கிளிநொச்சியில் உபகரணம் வழங்கல்

கிளிநொச்சி பிரதேசத்தில் வலுவிழந்தோர்தினம் அனுஷ்டிக்கப்பட்டது.

இந்தப் பிரதேசத்திலுள்ள வெண்புறா செயற்கை உறுப்பு உற்பத்தி நிறுவனத்தில் நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் வலுவிழந்தோர்களுக்கு முச்சக்கரவண்டிகள், மாற்று வலுவுடைய உபகரணங்கள் என்பன வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பிரதேசத்தில் மாற்று வலுவுள்ளோர் சங்கத்தினரின ஏற்பாட்டில், கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், தமிழீழத் தேசியக் கொடியை கிளிநொச்சி மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் காண்டீபன் ஏற்றிவைக்க, மாற்று வலுவுள்ளோர் கௌரவிப்பு நிகழ்வு இடம் பெற்றது. இதில் பெருமளவானோர் கலந்து கொண்டனர்.

# மாந்தை கிழக்கிலுள்ள 14 பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுகின்றது

முல்லைத்தீவு மாவட்ட - மாந்தை கிழக்கில் உள்ள 14 பாடசாலைகளிலும் பெரும் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வருகிறது என, கடந்த மாதம் மாந்தை கிழக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் மாதாந்த ஒன்று கூடலில் கலந்து கொண்ட கோட்டக்கல்விப் பணிப்பாளர் இராஜேஸ்வரன் கருத்து வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மாந்தை கிழக்கிலுள்ள 14 பாடசாலைகளிலும், ஆசிரியர்கள் பற்றாக்குறை நிலவி வருவதாகவும் அதிலும் துறைசார்ந்த ஆசிரியர் பற்றாக்குறை மிக மோசமாக உள்ளது எனவும், 22 தொண்டர் ஆசிரியர்கள் மட்டுமே கடமையாற்றி வருவதாகவும் தெரிவித்தார்.

## கரும்புள்ளியான் பிரதேசத்தில்

# குடிநீர் கிணறுகள் அமைப்பதற்கு தெரிவான இடம்குறித்து அதிருப்தி

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு கரும்புள்ளியான் பிரதேசத்தில் 2004 ஆம் ஆண்டு கெயர் நிதி ஒதுக்கீட்டின் கீழ், புதிதாக அமைக்கப்பட்ட கிணறுகள் உரிய இடங்களில் அமைக்கப்படாமை குறித்து, இந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்தப் பிரதேசத்தில் 237 குடும்பங்கள் வாழ்ந்து வரும் நிலையில், வரட்சிக் காலங்களில் குடிநீர் தட்டுப்பாடு நிலவி வருகிறது. இந்தக் கிராமத்துக்கென் ஒதுக்கப்பட்ட மூன்று குடிநீர் கிணறுகளும், மக்களுடைய தேவைகளுக்கு ஏற்ப அமைக்கப்படவில்லை.

இந்தக் கிணறுகள் பாண்டியன்குளம் பொதுச் சந்தை மற்றும் மக்கள் குடியிருப்பற்ற குடிநீர் தட்டுப்பாடற்ற பகுதிகளில் அமைக்கப்படடு வருவதாக, கரும்புள்ளியான் கிராமப் புனரமைப்புச் செயற்பாட்டு குழு மற்றும் இந்தப் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

# பூநகரி - மன்னார் வீதியூடாக போக்குவரத்து செய்வதில் சிரமம்

(கிளிநொச்சி)

பூநகரி - மன்னார் வீதியிலுள்ள பாரிய குழியில் நீர் நிரம்பிக் காணப்படுகிறது. இதனால் இந்த வீதியூடாகப் போக்குவரத்து செய்யும் வாகனங்கள் பெரும் சிரமங்களையும், ஆபத்துக்களையும் எதிர்நோக்கி வருகின்றன.

நீண்ட காலமாகப் புனரமைப்புச் செய்யாத நிலையில் இந்த வீதி காணப்படுவதால் மக்கள், பாடசாலை மாணவர்கள் ஆபத்துக்களை எதிர்நோக்குவதுடன், விபத்துக்கள் ஏற்பட்டு உயிரிழப்பு ஏற்படும் நிலையும் காணப்படுகிறது.

இதனால் சம்பந்தப்பட்டவர்கள் இதனைக் கருத்திற்கொண்டு, இந்த வீதியைப் புனரமைப்புச் செய்வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென, இந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## பொது மண்டபம் அமைப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி பிரதேசத்தில் நியாப் திட்டத்தின் நிதியுதவியுடன் பொது மண்டபம் ஒன்று அமைக்கப்பட்டது. இந்தப் பொது மண்டபம் வெகுவிரைவில் மக்கள் பாவனைக்கு திறந்து வைக்கப்பட வுள்ளது.

## வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல்

(கிளிநொச்சி)

ஏ-9 வீதியில் கழிவு வாய்க்கால் அமைப்பது தொடர்பாக வர்த்தகர்களுக்கான கலந்துரையாடல், நாளை மாலை 2 மணிக்கு கிளிநொச்சி மாநாட்டு மண்டபத்தில் நடை பெறவிருப்பதால், பிரதேச வர்த்தகர்கள் அனைவரும் தவறாது அந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு, தங்கள் ஆக்கபூர்வமான ஆலோசனை வழங்கி உதவுமாறு கரைசசி பிரதேச ஆணையாளர் கேட்டுள்ளார்.

# தெரிவு செய்யப்பட்ட வீதிகளின் புனரமைப்பு ஆரம்பமாகவில்லை

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவின் கீழ் புனரமைப்புக்கென வீதிகள் தெரிவு செய்யப்பட்டபோதும் இதுவரையில் அதற்கான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை.

இந்த உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழ் உள்ள கரும்புள்ளியான் வீதி, முருகன் வீதி, இராண்டாம் பாம் வீதி, 177 இலக்கம் தொடக்கம் 211 வரையான பாண்டியன் குளம் வீதி, 31 இலக்கம் தொடக்கம் 42 வரையான செல்வபுரம் வீதி, 163 இலக்கம் தொடக்கம் 195 வரையான பாண்டியன் குளம் வீதி போன்ற 7 குடியிருப்பு வீதிகளே புனரமைப்பு செய்யப்படாமல் காணப்படுகின்றன.

2004 ஆம் ஆண்டு உலக உணவுத் திட்டத்தின் கீழ் இந்த வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள போதிலும், இதுவரையில் எவையேனும் புனரமைப்பு செய்யப்படவில்லை.

இந்த வீதிகளை பிரதான வீதியாக கொண்ட, இந்தப் பகுதி மக்கள் வீதியூடாக போக்குவரத்து செய்யமுடியாத நிலையில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

## இருமாடிக் கட்டடம் அமைக்கப்படவுள்ளது

(கிளிநொச்சி)

கிளிநொச்சி - பூநகரி விக்னேஸ்வரா வித்தியாலயத்துக்கென புதிதாக இருமாடிக் கட்டடம் ஒன்று அமைப்படவுள்ளது. இந்தக் கட்டடம் நிகொட் நிறுவனத்தின் நிதியுதவியுடன் அமைப்படவுள்ளது. இதற்கான அடிக்கல் வெகுவிரைவில் நாட்டப்படும் என பாடசாலை சமூகத்தினர் தெரிவித்தனர்.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*சிற்றினம் அஞ்சும் பெருமை சிறுமைதான்*
*சுற்றமாச் சூழ்ந்து விடும்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## தமிழர் தரப்பால் ஏற்கமுடியாத அரச தரப்பின் நிலைப்பாடு

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பது தொடர்பாக அரசின் தற்போதைய நிலைப்பாட்டினை வெளிவிவகார அமைச்சரும் ஜனாதிபதியின் ஆலோசகர்களில் ஒருவருமான லக்ஷ்மன் கதிர்காமர் நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வெளிவிவகார அமைச்சுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையின்போது பின்வருமாறு தெரிவித்துள்ளதை கவனத்தில் கொண்டு பார்த்தால் பேச்சுவார்த்தைகள் ஒரு புரிந்துணர்வுடன் கூடிய சூழலில் மீண்டும் ஆரம்பிப்பதற்கான சாத்தியக் கூறுகள் குறித்த நம்பிக்கையூட்டும் சமிக்ஞைகள் எதுவும் தென்படுவதாக இல்லை என்றே உறுதியாகத் தோன்றுகின்றது எனலாம்.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வொன்றை எட்டுவதற்கான முதற்படியாக - இருதரப்பினருக்குமிடையே புரிந்துணர்வையும் பரஸ்பர நம்பிக்கையையும் வலுப்படுத்தும் வகையிலான ஒரு நடவடிக்கையாக - போரினாற் சிதையுண்ட வடக்கு - கிழக்கு பிரதேசங்களையும் அவற்றை தம் தாயகப்பகுதிகளாக உரிமைகோரி நிற்கும் தமிழ் மக்களின் இயல்பு வாழ்வையும் மீண்டும் புனரமைத்து, புனர்வாழ்வை வழங்கும் பாரிய சமாதான முன்னெடுப்பின் முக்கிய பணியை மேற்கொள்ள எந்தவகையிலும் தவிர்க்கவே முடியாத அம்சமான, விடுதலைப்புலிகளால் சர்வதேச அரசியலமைப்பு நிபுணர்களின் ஆழமான ஆலோசனைகளுடன் உருவாக்கப்பட்டு அரசின் பரிசீலனைக்காகவும் அங்கீகாரத்திற்காகவும் கையளிக்கப் பட்ட இடைக்கால தன்னாட்சி அதிகார சபைக்கான யோசனைகளை மட்டும் பிரதான பேச்சுவார்தைக்கான தளமாக ஏற்றுக்கொள்ள முடியாது என்று கதிர்காமர் தெரிவித்துள்ளார்.

கதிர்காமரூடாக வெளிவந்துள்ள அரசின் இந்த கருத்து நிலைப்பாடானது, தமிழ்மக்களின் அத்தியாவசியமான - மிகக் குறைந்தபட்ச நியாயபூர்வமான கோரிக்கைகளைக்கூட, மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகப் பண்புகளை மதிக்கும் தன்மையுடன் ஏற்று, பரிசீலித்து அங்கீகரிக்கும் மனோபாவத்துடன் ஆட்சி அதிகார பீடத்தவர் இல்லை என்பதை மீண்டும் உறுதி செய்துள்ளது என்றே கூறவேண்டும்.

இடைக்கால தன்னாட்சி நிர்வாக அதிகாரசபை என்ற சொற்பதத்திற் குறிப்பிடப்பட்டுள்ள 'இடைக்காலம்' என்ற சொல் வலியுறுத்தி நிற்கும் அர்த்தத்தை ஆழமாகக் கவனிப்பது அவசியமாகும்.

இடைக்காலம் என்பது ஒரு தற்காலிகமானதும், வரையறுக்கப் பட்ட காலஎல்லையைக் கொண்டதுமேயாகும்.

நிர்வாக அதிகாரசபை எனக் குறிப்பிடுவதை ஒரு அரசாக அர்த்தம் கொள்ளவேண்டிய அவசியமேயில்லை.

இங்கே தன்னாட்சி என்ற சொல்லை சுயாட்சி என மிகைப்படுத்திப் பிரசாரம் செய்வதானது, தென்பகுதிச் சிங்களப் பெரும்பான்மையினரைக் குழப்பி, அரசியல் ஆதாயம் தேடமுற்படும் பேரினவாத வெறியர்களின் குரூரமான சிந்தனையின் வெளிப்பாடேயாகும்.

தன்னாட்சி அதிகாரசபை என்பது தமிழீழ அரசுக்கான அடித்தளமென சமாதான விரோதிகள் பிரசாரம் செய்வது, தமிழ் மக்களுக்கான தற்காலிகமானதும், அவசியமானதுமான உரிமைத் தேவைகளைக்கூட அரசு அங்கீகரிக்கத் தயாராக இல்லை என்பதையே உணர்த்தி நிற்கிறது.

சிதைந்துபோன மண்ணையும், சீரழிக்கப்பட்ட வாழ்க்கையையும் தமிழ் மக்கள் சீரமைத்து மீட்டெடுக்க ஒரு ஒழுங்குபடுத்தப்பட்ட வேலைத் திட்டத்தை நடைமுறைப்படுத்தவேண்டிய தேவை இன்று தவிர்க்கமுடியாத அவசியமாகியுள்ள நிலையில், அதற்கான நிர்வாகக் கட்டமைப்பொன்றை அவர்கள் கோருவது நியாயமானதே. அந்த நிர்வாகக் கட்டமைப்பை அல்லது சபையை அவர்கள் தாங்களே உருவாக்கி, இயக்க விரும்புவதும் அவர்களது ஜனநாயக உரிமையே.

கடந்த அரசின் காலத்தில் ஆரம்பித்த சமாதானப் பேச்சு வார்த்தைகள் - கட்டம் கட்டமாக இடைக்கால நிர்வாகம் தொடர்பான கோரிக்கை முன்வைக்கப்படும்வரை, தொடர்ந்து அந்தக் கட்டத்திலேயே தேக்க நிலைக்குள்ளானதும் தெரிந்த விடயமே. அதனைத் தொடரமுடியாமல் போனமைக்கு அன்றைய எதிர்க்கட்சிகளாக இருந்த இன்றைய ஆளும் கூட்டணியின் பங்காளிகள் அதற்குக் காட்டிய தீவிர எதிர்ப்பும் பிரதான காரணமாகும்.

அத்துடன் சமாதான முயற்சிகளைக் குழப்பும் உத்வேகத்துடனும், ஏனைய அரசியல் சுயநலங்களை எட்டும் இலக்குடனுமே அன்றைய ஆட்சியை ஜனாதிபதி தனது அதிகார வலுவைப் பயன்படுத்தி கலைத்தார் என்பதும் உண்மையே! அதுவே பேச்சுவார்த்தைகள் இறுக்கமா்னதும், தொடரமுடியாததுமான ஒரு நெருக்கடி நிலைக்குள் சிக்கக் காரணமுமாயிற்று.

ஆட்சி மாறி, புதிய அரசு அமைந்ததும், மீண்டும் சமாதானத்தைத் தொடர பழைய சமாதான ஏற்பாட்டாளரையே ஜனாதிபதி அழைத்தது, புதிதாக புதிய தளத்தில் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கல்ல: விட்ட இடத்தில் இருந்து தொடர்வதற்கேயாகும்.


அந்த வகையில் இடைக்கால நிர்வாக அதிகாரசபை குறித்த விடயத்தில் இருந்தே பேச்சுக்களை தொடர்வதுதான் பொருத்தமும் நியாயமானதுமாகும். அதைவிடுத்து இறுதித்தீர்வு குறித்தும் ஏககாலத்தில் பேசவேண்டும் என்று வாதிப்பது வேறு உள்நோக்கத்துடன் கூடிய ஒன்றாகவே உள்ளது.

இடைக்கால நிர்வாகம் குறித்த நம்பிக்கையே, இறுதித் தீர்வு குறித்த நம்பிக்கைக்கு அடித்தளமாக அமையும். கடந்த காலங்களில் நியாயமற்றதும், ஆக்கிரமிப்புத் தன்மை கொண்டதும், ஒடுக்குமுறை இலக்கினைக் கொண்டதுமான கொடிய யுத்தமொன்றை தமிழ்மக்கள் மீது திணித்த ஓர் அரசு, நியாயமானதும், தமிழர்தம் அபிலாஷைகளை ஜனநாயக தர்மத்துடன் நிறைவேற்றக்கூடியதுமான இறுதித் தீர்வொன்றை உடனடியாக வழங்கும் என்ற நம்பிக்கை தமிழர்களுக்கு கிடையவே கிடையாது.

இடைக்கால நிர்வாக அதிகார சபையொன்றிற்கான தமிழர் தரப்பின் நியாயமான கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு, தமிழ் மக்களின் நம்பிக்கையை பெறாதவரை இறுதித் தீர்வு குறித்து அரசு பேசவிரும்புவதாகக் கூறுவதை தமிழ்மக்கள் நம்பத்தயாராக இல்லை.

வரலாற்று அனுபவங்கள் அவர்களுக்கு உணர்த்தியுள்ள பாடம் அதுவாகும்.

## நாடும் நடப்பும்




### வடமராட்சி கிழக்குப் பிரதேசத்துக்கு

# தனிப் பிரதேசசபை அமைக்க ஒன்றுபட்டு உழைக்கவேண்டும்

### உள்ளூராட்சி உதவி ஆணையாளர் தெரிவிப்பு

வடமராட்சிப் பிரதேசத்துக்கென தனியான ஒரு பிரதேச சபை ஒன்று உருவாக்கப்பட்டாற்தான், இந்தப் பிரதேச அபிவிருத்தி முன்னேற்றகரமாக இருக்கும். எனவே இந்தப் பிரதேசத்துக்குத் தனியான பிரதேச சபை ஒன்றை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து பாடுபடவேண்டுமென பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே.இராசையா தெரிவித்தார்.

மருதங்கேணியில் பருத்தித்துறை பிரதேசசபையின் செம்பியன்பற்று உப அலுவலகத்தை திறந்துவைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த கால யுத்தச் சூழ்நிலையின்போது இராணுவ நடவடிக்கையால் முற்றாக சேதமடைந்து தரைமட்டமாக்கப்பட்ட பருத்தித்துறை பிரதேச சபையின் செம்பியன் பற்று உப அலுவலகம் சுமார் மூன்று இலட்சம் ரூபா செலவில் முதற்கட்டமாக புனரமைப்புச் செய்யப்பட்டதையடுத்து இதன் திறப்பு விழா பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் பசுபதி தலைமையில் அண்மையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உப அலுவலக்ததைத் திறந்துவைத்து பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது-

வடமராட்சி வடக்குப் பிரதேசத்தில் உள்ள பருத்தித்துறைப் பிரதேசசபையின் உப அலுவலகமாக வடமராட்சி கிழக்கிலுள்ள செம்பியன்பற்று உப அலுவலகம் இருந்து வருகிறது. பிரதேசசபைக்கும், உப அலுவலகத்துக்கும் இடையே நீண்ட இடைவெளியும், இந்தப் பகுதிக்கான போக்குவரத்தும் மிகக் குறைவாகவே இருந்து வருகின்றது. இதனால் அபிவிருத்திகளை முன்னெடுப்பதிலும் நிர்வாகத் தொடர்புகளை ஏற்படுத்துவதிலும் சிரமங்கள் எதிர்நோக்கப்படுகின்றன. வடமராட்சிப் பிரதேசம் போரினால் மிகவும் பாதிக்கப்பட்ட நிலையில உள்ளது.

எனவே, தனியான உதவி அரசாங்க அதிபர் பிரிவைக் கொண்ட வடமராட்சி கிழக்குப் பகுதிக்கென செம்பியன்பற்றை தலைமையகமாகக் கொண்ட தனியான பிரதேசசபை ஒன்றை உருவாக்க - இந்தப் பிரதேச சமூக அமைப்புக்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் முன்வரவேண்டும். அப்போதுதான் போரினால் சிதைவடைந்த இந்தப் பிரதேசமும் இந்தப் பிரதேச மக்களும் இங்குள்ள சிறந்த இயற்கை வளங்களை கொண்டு முன்னேற்றத்தையும் அபிவிருத்தியையும் காணமுடியுமென அவர் தெரிவித்தார்.

விழாவிற்கு தலைமை வகித்த பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் சி.பசுபதி பேசுகையில் செம்பியன்பற்று உப அலுவலகம் வளர்ச்சிபெற இந்தப் பகுதிமக்களின் ஒத்துழைப்பு மிக அவசியமாகும். பருத்தித்துறை பிரதேச சபைக்கு வழங்கப்பட்ட ஆளணி மிகக் குறைவானதாகும். இதனால் செம்பியன்பற்று உப அலுவலகத்துக்கு ஆளணியை ஏற்படுத்த முடியாத இக்கட்டான நிலை காணப்படுகிறது. இது குறித்து மேலிடத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. போதிய ஆளணி கிடைத்ததும் உடனடியாக இந்த அலுவலகத்திற்கு ஆளணியினர் நியமிக்கப்படுவார்கள்.

கடந்தகாலப் போர் அனர்த்தங்களால் செம்பியன்பற்று உப அலுவலக நூலக தளபாடங்கள், புத்தகங்கள் அனைத்தும் முற்றாக அழிக்கப்பட்டுள்ளன. எனினும் இந்தப் பகுதி மக்களின் நன்மை கருதி நிறுவனங்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் உதவிபுரிந்து நூலகத்தை மீள இயக்க நடவடிக்கை எடுக்கவேண்டுமெனவும் தெரிவித்தார். (14)

## புனரமைக்க முடியாத நிலையில் பருத்தித்துறை வெளிச்ச வீடு

பருத்தித்துறை கடற்கரையில் காணப்படும் வெளிச்ச வீட்டைப் புனரமைப்புச்செய்ய, வெளிநாட்டு நிறுவனம் ஒன்று முன்வந்த போதும், கடற்தொழில் நீரியல் வளத்திணைக்களம் ஒத்துழைப்பு வழங்காமையால், புனரமைப்புச் செய்ய முடியாத நிலை காணப்படுகின்றது.

பல தடவைகள் இந்தப் பகுதி மீனவ சங்கங்கள் இந்த வெளிச்ச வீட்டைப் புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்தும், எதுவித நடவடிக்கையும் எடுக்காத நிலையில், தற்போது வெளிநாட்டு நிறுவனம் ஒன்று அதனைப் புனரமைக்க முன்வந்த போதும், அதற்குப் பொறுப்பான திணைக்களம் பின்னடிக்கிறது.

தற்போது கடுங்காற்று வீசுவதுடன், பலத்த மழையும் பெய்வதால் வெளிச்ச வீடு அவசியம் தேவையானதொன்றாக இருக்கிறது. வெளிச்ச வீடு இன்மையால் வடமராட்சி மீனவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டு வருவதாகவும் மீனவர் சமாசம் தெரிவித்துள்ளது.

## அலுவலகக் கொடுப்பனவாக எம்.பிகளுக்கு 10 ஆயிரம் ரூபா

அடுத்த ஜனவரி மாதம் முதல் நாடாளுமன்ற உறுப்பினர்களின் அலுவலக செலவுக்கென மாதாந்தம் 10 ஆயிரம் ரூபாவை ஒதுக்குவதென்று, கட்சித் தலைவர்களின் கூட்டத்திற் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர்களின் தனிப்பட்ட ஊழியர்களுக்கு வழங்கப்படும் ரயில் பயண அனுமதிச் சீட்டுக்குப் பதிலாகவே, இந்த 10 ஆயிரம் ரூபாவை வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவருக்கு ரயில் பயண அனுமதிச் சீட்டுக்கள் நான்கு இலவசமாக வழங்கப்படுகிறது.

நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் அலுவலக செயற்பாட்டு கொடுப்பனவாக, 10 ஆயிரம் ரூபா பெற்றுக் கொள்வதோடு, ரயில் பயண அனுமதிப் பத்திரத்துக்கும் 2500 ரூபா கழிப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தற்போது நான்கு ரயில் பயண அனும்திச் சீட்டைப் பெற்றுக்கொள்ளும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு, மாதாந்தம் அலுவலகக் கொடுப்பனவாக வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்ட 10 ஆயிரம் ரூபா, வழங்கப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டது. (தே)

## மட்டக்களப்பு வீதி விபத்தில் பாடசாலை மாணவி பலி!

மட்டக்களப்பு வீச்சுக் கல்முனைப் பகுதியில் இடம்பெற்ற வீதி விபத்தொன்றில், பாடசாலைச் சிறுமி ஒருவர் உயிரிழந்ததுடன், மற்றுமொரு சிறுமி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு வின்சன் பெண்கள் உயர்தர பாடசாலையைச் சேர்ந்த மாணவியான- திருநாவுக்கரசு சிந்துஜா (வயது 12) என்பவரே உயிரிழந்தவராவார். காயமடைந்தவர் அதே பாடசாலையைச் சேர்ந்த தனுஜா (வயது 12) என்பவராவார்.

பாடசாலையில் நடைபெற்ற பரீட்சைக்குத் தோற்றிவிட்டு இருவரும் ஒரே சைக்கிளில் வீடுநோக்கி வந்தவேளை, வீச்சுக் கல்முனைப் பகுதியிலுள்ள வளைவொன்றில் இவர்கள திரும்பியவேளை, எதிரே வந்த வான் இவர்களை மோதிய போதே இந்த அனர்த்தம் நிகழ்ந்தது.

இது தொடர்பாக வான் சாரதியைக் கைது செய்த பொலிஸார் - வானையும் தடுத்து வைத்துள்ளனர்.

வாரநோக்கு...

- யாழவன்

# தேசியத் தலைவரின் மாவீரர் நாள் உரையும் அதன் எதிரொலிகளும்... சில எண்ணங்களும்...

பலரும் ஆவலோடு எதிர்பார்த்திருந்த மாவீரர் தின உரையை - தமிழீழ தேசியத் தலைவர் நிகழ்த்தியுள்ள இந்த நிலையில், அந்த உரையில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள்



தொடர்பாகப் பலரும் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். திருவள்ளுவரின் திருக்குறளுக்குப் பலர் உரை எழுதியது போல, தேசியத் தலைவரின் உரைக்கும், பலர் விளக்கமளிக்க ஆரம்பித்துள்ளனர். ஏற்கனவே எதிர்பார்க்கப்பட்ட விடயங்களே உரையில் அடங்கியிருந்தன என ஒருசாராரும், எதிர்ப்பார்த்த சில விடயங்கள் அடக்கப்படவில்லையென ஒரு சாராரும் இன்று தமது கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

வழமை போன்றே இந்த முறை உரையும் இடம்பெற்றிருப்பதாகவும், ஆனால் அரசுக்கும் சர்வதேசத்துக்கும் சற்று உறைக்குமாபபோல அமைந்துள்ளதாகவும் சிலர் கருத்துக் கொண்டுள்ளனர். ஆனாலும் கூட, தேசியத் தலைவரது உரையிலே பல அழுத்தமான, அவசியமான விடயங்கள் பொதிந்துள்ளமையை ஆழநோக்கின் அறிந்து கொள்ளமுடியும். பொறுமைக்கும், எதிர்பார்ப்புக்கும் எல்லைக் கோடுகளுள்ளன. அந்த எல்லைக் கோடுகளை நாம் அடைந்துவிட்டோம் எனத் தெரிவித்தமையை, சிலர் மீண்டும் ஒரு போருக்கான அறிகுறியெனவும் அர்த்தம் கொள்கிறார்கள். எது எவ்வாறிருப்பினும், இந்த முறை உரை விடுதலைப் புலிகளினதும். தமிழ் மக்களினதும் நிலைப்பாட்டைத் தெட்டத்தெளிவாக மீண்டுமொரு முறை வலியுறுத்தியுள்ளது என்பதே வெளிப்படையாகும்.

சர்வதேச சமூகம் இன்று விடுதலைப் புலிகளை நோக்கி, விட்டுக் கொடுங்கள், விட்டுக் கொடுங்கள் என அழுத்தத்தைப் பிரயோகித்து வருகிறது. இந்த அழுத்தப் பிரயோகிப்பாளர்களுக்கும் இந்த முறை உரை தெளிவான விளக்கத்தை வழங்கியிருக்கும். தமிழர் தரப்பு இன்று விட்டுக் கொடுப்பினதும், பொறுமையினதும் எல்லைக் கோட்டை அடைந்து விட்டனர். எனவே இனியும் அவர்களால் விட்டுக்கொடுக்க முடியாது. அரசு தான் விட்டுக் கொடுக்க வேண்டும். இதற்குச் சர்வதேச சமூகம் அரசுக்கு அழுத்தத்தைப் பிரயோகிக்க வேண்டுமெனவும் தலைவர் தெரிவித்துள்ளார். இதனை அந்தச் சமூகம் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

இலங்கையிலே சமாதானம் மலரவேண்டும் என்பதிலே குறியாகவுள்ள நாடுகள் சமாதானப் பாதையிலுள்ள தடைகளையும் நீக்க வேண்டும். இப்போது தடையைத் தேசியத் தலைவர் அடையாளப்படுத்தியுள்ளார். அதனை உணர்ந்து அத்தடையை அகற்ற சர்வதேச சமூகம் தயாராக வேண்டும். மாறி மாறி ஆட்சி பீடத்துக்கு வரும் சிங்கள அரசியற் கட்சிகளினது சுயரூபத்தையும், தனது உரையிலே தலைவர் சுட்டிக் காட்டியுள்ளார். எனவே இந்த முறை உரை, தமிழ் மக்களை விட சர்வதேச சமூகத்துக்கும், சிங்கள ஆட்சி பீடத்துக்குமே அதிக பயனுள்ளதாகும்.

ஆனாலும், உரையின் ஆரம்பப் பகுதி தமிழ் மக்களுக்கு ஓர் உண்மை நிலையைச் சுட்டிக் காட்டியிருந்தது. இன்று சில தமிழ் மக்கள் எல்லாமே முடிந்துவிட்டன, இனி இடைக்கால நிர்வாகமொன்று வருவது தான் மீதி என எண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் இந்த சமாதான சூழலைப் பயன்படுத்தி, தாம் அரசியல் வெறுமைகளாக மாற்றப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பதை பலர் மறந்து செயற்படுகிறார்கள். இது எமது விடுதலைப் போராட்டத்தைத் திசை திருப்பி விடக் கூடியது என்பதை தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டுமென தேசியத் தலைவர் வலியுறுத்திக் கூறியுள்ளார்.

இன்று பல வழிகளிலும் திசை திருப்பிகள் முளையெடுக்கத் தொடங்கிவிட்டனர். தமிழர் விடுதலைப் போராட்டத்தின் நிறைவுத் தன்மையைச் சீர்குலைப்பதற்கான திரைமறைவு முயற்சிகள் தாராளமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மக்கள் மத்தியிலேயே இவ்வாறான முயற்சிகளுள் அனேகமானவை முன்னெடுத்துச் செல்லப்படுகின்றன. இலஙகை அரசும், அதனோடு இணைநத சில சர்வதேச அரசுகளும் இந்தப் பணியிலே முழுமூச்சாக ஈடுபட்டுள்ளன. எனவே இது தொடர்பாகவே தமிழ் மக்கள் விழிப்பாக இருக்க வேண்டுமென வலியுறுத்தப்பட்டுள்ளது.

பல வழிகளிலும் தமிழர் விடுதலைப் பேராட்டத்தை நசுக்க முயனற சக்திகள், அந்த வழிகள் தோல்வியடையவே, தற்போது சமாதானம் எனும் பொறியை வைத்து அதனூடாக விடுதலைப் போராட்டத்தை நசுக்க முயலகின்றன. சமாதான காலததை மேலும் மேலும் இழுத்தடித்து. அரசின் படைவலுச் சமநிலையை மேலும் அதிகரித்து, சமாதான இழுபறி நிலை காரணமாக விடுதலைப் புலிகளுக்குச் சலிப்பையும், வெறுப்பையும் ஊட்டி, அவர்களே மீண்டும் போரை ஆரம்பிப்பதற்கான வழிகளை ஏற்படுத்திப் போரை விரும்பாத மக்களை அவர்களுக்கு எதிராகத் திசை திருப்பிவிட முயல்கிறது சிங்கள தேசம். இதனாலேயே 'அந்தா, இந்தா' என பேச்சு வார்த்தைகள் தொடர்பாக வெறுமனே பந்தாவே காட்டப்பட்டு வருகிறது.

சமாதான சூழ்நிலையொன்றிலே தமிழ் மக்களால் உணர்வு பூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட மாவீரர் தின நிகழ்வுகளை இயன்றவரை குழப்புவதிலேயே படைத்தரப்பு இறுதி வரை செயற்பட்டுவந்தது. விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுடனான சந்திப்பின்போது வழங்கப்பட்ட உறுதிமொழிகள் அனைத்தும் காற்றிலே பறக்கவிடப்பட்டன. காட்டுமிராண்டித்தனம் கட்டவிழ்த்து விடப்பட்டது. பொதுமக்கள் மோசமாகத் தாக்கப்பட்டு படுகாயமுற்று வைத்தியசாலைகளிலே அனுமதிக்கப்பட்டார்கள். அடாவடித்தனத்தின் உச்சக்கட்டமாகப் பொதுமக்கள் பலர்படுகாயமடைந்த சம்பவம் நடந்து முடிந்தது.

அனைத்துச் சம்பவங்களினதும் அடிப்படை, தமிழீழ தேசிய கொடியை ஏற்றுவதிலிருந்தே ஆரம்பித்ததாக வெளியே தெரிந்தாலும், இந்த குழப்பங்களுக்கு மூலகாரணம் படையினரின் உளவியல் தாக்கமே. தமது விடுதலைக்காகவும், சுதந்திரத்துக்காகவும் உயிர்நீத்த மாவீரர்களை அனைத்து மக்களும் உணர்வு பூர்வமாக நினைவு கூருவதும். இன்று தமிழினத்தின் உன்னத தலைவனாக விளங்கும் தமிழீழ தேசியத் தலைவரின் ஐம்பதாவது பிறந்த தினத்தை எழுச்சியுடன் கொண்டாடுவதும், படையினர் மத்தியிலே உளவியல் தாக்கமொன்றை ஏற்படுத்தியுள்ளது. இதன் வெளிப்பாடாகவே மக்கள் மீது தாக்குதல்கள் நடாத்தப்பட்டன.

படையினரைப் போலவே ஜே.வி.பி.யினரும் வேறு சில இனவாதக் கட்சிகளும் இணைந்து ஊர்வலங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் நடத்தி மாவீரர்தின நிகழ்வுகளைக் குழப்புவதற்கு முயன்றார்கள். அவர்களது முயற்சியும் பயனற்றுப் போனது. "உண்மை வீரர்கள் தினம்" என ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்வும் வெறும் நூறிலும் குறைவானோரோடேயே நடந்து முடிந்தது. ஆனால் நாடாளுமன்ற வாயிலில் கூட தமிழீழ மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்பட்டு இலங்கையின் வரலாற்றில் புதிய சாதனை பதிவானது.

மாவீரர் தின நிகழ்வுகளைக் குழப்பி தமிழ் மக்களுக்கு இடையூறு விளைவிக்க முயன்றவர்கள் தம்மையுமறியாமல் தமிழர்களுக்கு மிகப் பெரியதொரு உதவியை நிறைவேற்றியுள்ளனர். அதாவது தமது சொந்த மண்ணிலே, தமது தாயக பூமியிலே தமக்காக மடிந்தவர்களை மனவுணர்வோடு மதிப்பறிந்து ஒரு விழாவை சிறப்புற நடாத்துவதற்கே தமிழ் மக்களுக்கு சிங்கள இனவாதிகளின் அனுமதி இல்லையெனில் எவ்வாறு அந்த மக்களுடைய சுயநிர்ணய உரிமைபற்றி அந்த இனவாத அரசுகளால் பேசமுடியும் என்பதை சர்வதேச சமூகம் புரிந்துகொள்ள, நடந்து முடிந்த நிகழ்வுகள் ஆதாரங்களாக அமைகின்றன. சர்வதேச சமூகத்துடன் இணைந்து சிங்கள பொதுமக்களும் தமது ஆட்சியாளர்களின் அழிவுச் சிந்தனையைப் புரிந்துகொள்ள வேண்டும். இறந்தவர்களுக்கு மதிப்பளிப்பதையே பொறுகக முடியாத மானுட சிந்தனையற்றவர்களால் தாம் ஆளப்படுகின்றோமே எனும் தமது தலைவிதியை நினைத்து வேதனைப்பட வேண்டியவர்களாக அவர்களுள்ளனர்.

மாவீரர் தின நிகழ்வுகள் உலக அரங்குக்கு பல உண்மைகளை உணர்த்தியிருக்கும் வேளைகளில், சிங்கள இனவாதிகளுக்கும் ஒரு உண்மையை உறைக்கச் செய்துள்ளது. "அடக்க அடக்க மக்கள் அடக்குமுறைக் கெதிராக பொங்கி எழுவார்கள்" என்பதே அந்த உண்மையாகும். தமிழ் மக்கள், தம்மீது தாக்குதல் நடாத்திய படையினரை கைகளை மட்டுமே கொண்டு எதிர்க்க துணிந்தார்கள் எனின், இராணுவம் மக்களின் மனநிலையை புரிய முடியும். எதிர்காலத்திலே சமாதானம் குழப்பமுற்று, விடுதலைப் போர் வேகமடையும் வேளையிலே மக்களினது எதிர்ப்பையும் படையினர் சமாளிக்க வேண்டியேற்படும்.

எந்த வல்லரசு இலங்கை அரசுக்கு துணையாக வந்தாலும் தமிழீழ தேசியத் தலைவரின் பின்னால் திரண்டுள்ள விசுவாசப் படையை ஒன்றுமே செய்யமுடியாது. மன வலிமையும், தேசப்பற்றும் கொண்ட இந்த விசுவாசப் படையைக் கொண்டே தமிழீழ விடுதலைப் போராட்டத்தை வென்றெடுக்க முடியும். இந்த யதார்த் தத்தைப் புரியவைப்பதாகவும் மாவீரர் நாள் அமைந்திருந்தது.



தமிழீழ தேசியத் தலைவர் தனது உரையிலே கருணாவினது விடயம் தொடர்பாகக் குறிப்பிடாமையை இட்டுப் பலர் குழப்பமடைந்துள்ளார்கள். ஆனால் தேசியத் தலைவர் எதற்காக அந்த விடயத்தைத் தொடாமல்விட்டார என்பதை அவர்கள் புரிந்து கொளள வேண்டும். கருணாவினது விடயத்துக்கு மதிப்பளித்து அதை மக்கள் மத்தியிலே தெளிவுபடுத்த வேணடியது அவசியமற்றது. ஏனெனில் ஆரம்பம்முதலே தனிமனித பிரச்சினையாகவே அணுகப்பட்ட கருணா விடயத்துக்குத் தலைவர் தனது உரையிலே இடம் கொடுப்பின் அது கனம் பண்ணப்பட்ட ஒரு விடயமாக அமைந்துவிடும். கருணாவினது துரோகத்தனம் விடுதலை அமைப்பை எந்த வகையிலும் பாதிக்க வில்லை. எனவே மற்றவர்கள் எண்ணுவதுபோல அது ஒன்றும் பெரிய விடயமல்ல என்பதனாலேயே தேசியத் தலைவர் தனது உரையிலே அதற்கு இடங்கொடுக்கவில்லை.

அதேவேளை, கருணாவும் மாவீரர் தின உரையொன்றை நிகழ்த்தியுள்ளமையை அவரது இணையத்தளம் வெளியிட்டுள்ளது. அந்த உரையிலே, இந்தியாவைப் புகழ்ந்து தள்ளியுள்ளார். "இது எலும்புத் துண்டுக்காக ஏங்கும் எச்சில் நாக்கைத் தொங்கப்போட்ட நாயின் வேலையாகும்".

இந்தக் கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்ட கருணா தமிழ் மக்களின் விடிவுக்காகப் போராடப் போவதாகத் தெரிவித்துள்ளமையானது விந்தையானது. முளைத்து மூன்று இலை விடுமுன்னேயே கருணாவின் கட்சிக்குள்ளே கருத்துவேறு பாடுகளும், களையெடுப்புக்களும், ஆட கடத்தல்களும் அதிகரித்துள்ள நிலையில் அவர்கள் எவ்வாறு தமிழ் மக்களின் விடிவுக்குப் போராடப் போகிறார்கள் என்பதுதான் பலருக்கும் புரியாத புதிரான விடயம். பாவம் கருணா பழி சுமந்தவர்.

இப்போது பாவத்தையும் சுமைக்கு மேல் சுமையென சுமக்கத் தொடங்கிவிட்டார். இந்தியாவின் கைப்பொம்மையாக மாறியுள்ள கருணா, பொம்மலாட்டத்துக்குத் தயாராகி நடித்துக் கொண்டிருக்கிறார். இன்னும் நீண்ட நாட்கள் தொடராது இந்தப் புதிய வேடம். அதையும் களைந்து ஓட வேண்டிய காலம் அவரைத் துரத்திக் கொண்டுதானிருக்கிறது. ***

# பலஸ்தீன தேர்தலை முன்னிட்டு ஹமாஸ் தாக்குதல் நிறுத்தம்!





தீவிரவாதிகளின் தாக்கு தலை முறியடிப்பது தொடர்பான பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் இந்தோனேஷியப் படைகளின் ஒத்திகை நடவடிக்கைக்காக மகஸ்சர் விமான நிலையத்தில் ஏற்படுத்தப்பட்ட குண்டு வெடிப்பை மேலுள்ள படத்திலும் -

குறிபார்த்துச் சுடும் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் விமானப் படை வீரரை அருகிலுள்ள படத்திலும் காணலாம்.

பலஸ்தீனத்தில் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு ஹமாஸ் அமைப்பு யுத்தநிறுத்தமொன்றைச் செய்வதற்கு ஆலோசித்து வருவதாக அந்த அமைப்பின் சிரேஷ்ட தலைவர்களில் ஒருவரான ம.்.மூட் அல் சகார் தெரிவித்தார்.

ஆனால் பலஸ்தீனத்தின் மீது இஸ்ரேல் நடத்தும் ஆக்கிரமிப்பை நிறுத்தினால் மட்டுமே தமது தாக்குதல் நடவடிக்கைகளை நிறுத்தி வைக்க முடியுமெனவும் அவர் நிபந்தனை விதித்துள்ளார்.

எனினும் பலஸ்தீனப் பிரதேசங்களில் அமைதி நிலவுமாக இருந்தால் இஸ்ரேல் தனது நடவடிக்கையை நிறுத்திக்கொள்ளுமென பிரதமர் ஏரியல் ஷரோன் தெரிவித்துள்ளார்.

ஹமாஸின் இந்த அறிவிப்பை வெளியிடுவதற்கு முன்னர் பலஸ்தீனத்தின் இடைக்காலத் தலைவர் அபாஸை அல் - சகார் கடந்த வியாழக்கிழமை மாலை சந்தித்துக் கலந்துரையாடியிருந்தார்.

இதன்பின்னர் பத்திரிகையாளர்களிடம் கருத்து தெரிவித்த சகார்-

ஹமாஸ் அமைப்பின் தாக்குதல் நிறுத்தம் தொடர்பாக அடுத்த வாரம் பத்தா அமைப்புடன் கலந்துரையாடவுள்ளோம். அத்துடன் பலஸ்தீனத்தில் இடம்பெறும் அனைத்து வன்முறைகளுக்கும் இஸ்ரேல் அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும். நாம் எமது சுயபாதுகாப்புக்காகவே போராடுகிறோம்.

பலஸ்தீனப் பொதுமக்கள் மீதான ஆக்கிரமிப்பை இஸ்ரேல் நிறுத்துமாக இருந்தால் அது ஒரு சமாதானத்திற்கான வழியென நான் நினைக்கிறேன். இதன்மூலம் நாங்கள் இறுதி உடன்பாட்டிற்கும் வரலாம் எனத் தெரிவித்தார்.

இதேவேளை நேற்றுமுன்தினம் மேற்குக்கரைப் பகுதியில் இஸ்ரேல் படையினர் வீடொன்றினைச் சுற்றிவளைத்து நடத்திய தாக்குதலில்



ஜிகாத் அமைப்பைச் சேர்ந்த ம.்.மூட் ஹமாட் என்பவர் கொல்லப்பட்டார்.

சுற்றிவளைக்கப்பட்ட வீட்டிலிருந்த இவரை சரணடையுமாறு விடுக்கப்பட்ட அழைப்பை இவர் நிராகரித்து அங்கிருந்து தப்பிச்செல்ல முற்பட்டதாகவும், இஸ்ரேல் மீது நடத்தப்பட்ட பல தாக்குதல்களுடன் தொடர்புடைய இவரைத் தாம் தேடி வந்ததாகவும் இஸ்ரேல் இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

# உக்ரைனில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல்



உக்ரைனில் நடந்த சர்ச்சைக்குரிய தேர்தல் மோசடியானதென அந்த நாட்டு உயர் நீதிமன்றம் நேற்றுமுன்தினம் தீர்பளித்ததையடுத்து அங்கு எதிர்வரும் 26 ஆம் திகதி மீளவும் தேர்தல் நடத்தப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.


இந்த நிலையில் ரஷ்ய ஆதரவாளரான தற்போதைய பிரதமர் யனுகோவிச், நடைபெறவுள்ள தேர்தலில் போட்டியிடுவாரென அவரது உதவியாளர்கள் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தின் இந்தத் தீர்ப்பானது உக்ரைனில் உண்மையான ஜனநாயகம் உள்ளதென்பதனை எடுத்துக்காட்டுவதாக மேற்குலக ஆதரவுபெற்ற எதிர்க்கட்சி வேட்பாளர் யுன்சென்கோ தெரிவித்தார்.

ஆனாலும் தற்போதைய பிரதமர் யனுகோவிச்சின் ஆதரவாளர்கள் நீதிமன்றத்தின் தீர்ப்பு அரசியல் ரீதியானதென தெரிவித்ததுடன் மீண்டும் போட்டியிடவுள்ள யனுகோவிச்சை தாம் வெற்றி பெறச்செய்யப் போவதாகவும் சூளுரைத்துள்ளனர்.

கடந்த ஐந்து நாட்களாக இடம் பெற்ற விவாதத்திற்குப் பின்னர் நேற்று முன்தினம் உக்ரைனில் நடந்த தேர்தல் மோசடி நிறைந்தது என உயர் நீதிமன்றம் தீர்பளித்தது. அத்துடன் நீதிமன்றத்தின் தீர்ப்பு இறுதியானதெனவும், எனவே இந்தத் தீர்ப்பு தொடர்பாக மீண்டும் மனுத்தாக்கல் செய்யமுடியாதெனவும் உயர் நீதிமன்றத்தின் பிரதம நீதியரசர் அனாரோலி யநீமா தெரிவித்தார்.

# ஈராக்கில் தற்கொலைத் தாக்குதல்; 7 பொலிஸார் பலி, 59 பேர் படுகாயம்!



ஈராக்கின் தலைநகர் பாக்தாத்திலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு வெளியே இடம்பெற்ற வாகன தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் ஏழு பொலிஸார் கொல்லப்பட்டுள்ளதுடன் 59 பேர் படுகாயமடைந்ததாகத் தகவல்கள் தெரிவித்தன.

நேற்றுக்காலை பிக் - அப் வாகனமொன்று பொலிஸ் நிலையத்தை நோக்கி வேகமாகச் சென்றதனைத் தாம் கண்டதாகச் சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதல் நடத்தப்பட்ட இடத்திற்கு அருகில் ஈரர்க்கிய உட்துறை அமைச்சு அலுவலகம் மற்றும் வெளிநாட்டு அலுவலகங்களும் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உலக நோக்கு

அத்துடன் இந்த இடத்திற்கு அருகில் அமெரிக்க இராணுவம் மற்றும் தூதரகம் என்பன கூட்டம் நடத்தும் இடமுள்ளதுடன், இராஜதந்திரிகள் மற்றும் வெளிநாட்டு ஒப்பந்தகாரர்கள் தங்கும் அல் - ரசீத் ஹோட்டலும் உள்ளதாகவும் அமெரிக்க இராணுவ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தத் தாக்குதலில் அமெரிக்கக் கூட்டணிப் படைகளைச் சேர்ந்த எவரும் காயமடையவில்லையெனவும், சேதங்கள் ஏற்பட்டது முழுவதும் ஈராக்கியர்களுக்கே எனவும், அமெரிக்கத் தூதரகப் பேச்சாளரான பொப் கல்லாகன் தெரிவித்தார்.

இந்தத் தாக்குதலில் தற்கொலையாளியாக வந்தவரின் உடல் வீதியில் சிதறுண்டு கிடப்பதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# பிரபல அமெரிக்கக் கம்பனியின் பெயரில் பி.பி.சி. தொலைக்காட்சியை ஏமாற்றிய நபர்

பிரபல அமெரிக்க கம்பனியின் பெயரில் பி.பி.சி நிறுவனத்தை ஒருவர் ஏமாற்றிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்திய மத்திய பிரதேச மாநிலம் போபால் நகரிலிருந்த இரசாயன நிறுவனத் தொழிற்சாலையில் கடந்த 1984 ஆம் ஆண்டு டிசெம்பா 3 ஆம் திகதி விஷவாயுக் கசிவு ஏற்பட்டதில் 3500 பேர் பலியானார்கள். மேலும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பாதிக்கப்பட்டனர். பின்னர் இந்த நிறுவனத்தை டோவ் கெமிக்கல் என்ற அமெரிக்க நிறுவனம் ஏற்றது.

உலகையே அதிர்ச்சிக்குள்ளாக்கிய போபால் விஷவாயு உயிர்ப் பலிச் சம்பவத்தின் 20 ஆவது நினைவுதினம் நேற்றுக் கடைபிடிக்கப்பட்டது.

கோபால் விஷவாயு கசிவுப் பிரச்சினை தொடர்பாக நபர் ஒருவர் லண்டன் பி.பி.சி நிறுவனத் தொலைக்காட்சிச் செய்திப் பிரிவை ஏமாற்றிய வினோத சம்பவமும் நேற்று நடந்தது.

தனது பெயர் ஜுடே பினிஸ்டெர்ரா என்றும் தான் டோவ் கெமிக்கல் நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் என்றும் தன்னை அறிமுகப்படுத்திக்கொண்ட அந்த நபர் பிரான்ஸ் தலைநகர் பாரீசில் பி.பி.சி செய்திச் சேவைக்குப் பேட்டியளித்தார். அப்போது போபால் விஷவாயுத் தாக்குதற் சம்பவத்துக்கு தங்கள் நிறுவனம் முழு பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு இருப்பதாகவும் இந்தத் துயரச் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்திய மதிப்பில் ரூ.60 ஆயிரம் கோடி நஷ்டஈடாக வழங்கப்படும் என்றும் கூறினார். இந்த உதவியை அறிவிப்பதில் தான் மகிழ்ச்சி அடைவதாகவும் இந்த நிதியுதவி திட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட 1 லட்சத்து 20 ஆயிரம் பேருக்கு மருத்துவ உதவியும் வழங்கப்படும் என்றும் அந்த நபர் கூறினார்.

இந்தச் செய்தி உலகம் முழுவதிலும் ஒளிபரப்பானது. செய்தி நிறுவனங்களும் இந்தச் செய்தியை உடனடியாக வெளியிட்டன.

ஆனால் இந்த செய்தி வெளியான சிறிது நேரத்திலேயே அது தவறான செய்தி என்ற தகவல் பி.பி.சி நிறுவனத்துக்கு தெரியவந்தது. ஜுடே பினிஸ்டெர்ரா என்ற பெயரில் பேட்டியளித்த நபர் டோவ் கெமிக்கல் நிறுவன செய்தித் தொடர்பாளர் அல்ல என்றும் அவர் ஏமாற்றியிருப்பதையும் தெரியப்படுத்தி அந்த நிறுவனம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

புகழ்பெற்ற பி.பி.சி நிறுவனத்தையே ஒரு நபர் ஏமாற்றிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# அமெரிக்க பாதுகாப்பு செயலராக ரம்ஸ் பீல்ட் நீடிக்க இணக்கம்!



அமெரிக்க பாதுகாப்பு செயலராக தொடர்ந்தும் நீடிக்குமாறு அதிபர் புஷ் கேட்டுக்கொண்டதை, ரம்ஸ்பீல்ட் ஏற்றுக் கொண்டுள்ளதாக அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அத்துடன் பிரச்சினையான காலத்தில் ரம்ஸ் பீல்ட் சிறந்ததொரு தலைவர் என்பதனை நிரூபித்துள்ளதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

ஈராக்கில் கைதுசெய்யப்பட்டவர்கள் அபுகிறாப் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த வேளை, அமெரிக்கப் படைகளால் பாலியற் துன்புறுத்தல் மேற்கொள்ளப்பட்டது தொடர்பாக ரம்ஸ் பீல்ட் கடும் விமர்சனத்திற்குள்ளாகியிருந்தார்.

ஆனாலும் தனது அமைச்சரவையில் ரம்ஸ் பீல்ட் முக்கியமான ஒருவர் என்பதனை அதிபர் புஷ் தெளிவுபடுத்தியுள்ளாரென செய்தியாளர்கள் தெரிவித்தனர்.

அமெரிக்காவிற்குச் சவாலான நேரத்தில் ரம்ஸ் பீல்ட் தானொரு சிறந்த தலைவர் என்பதனை நிரூபித்தவர். நாம் வேறுபட்ட நிலையில் போரை நடத்திக் கொண்டிருக்கிறோம். இதில் நாம் வெற்றி பெறுவது முக்கியமானதென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்தனர்.

அமெரிக்க அதிபர் புஷ்ஷின் இரண்டாவது பதவிக் காலத்தில் அவரது அமைச்சரவையிலிருந்த பலர் பதவிவிலகிச் சென்ற நிலையில் ரம்ஸ் பீல்டின் எதிர்காலமும் கேள்விக் குறியாகி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

# பாகிஸ்தானின் காஷ்மீர் பிரதேசத்தில் ஒஸாமாவைத் தேடும் அமெரிக்கப்படை!



பாகிஸ்தானின் காஷ்மீர் பிரதேசத்திலுள்ள ஜில்ஜிட் பகுதியில் ஒஸாமா பின்லேடனைத் தேடும் பணியில் அமெரிக்கப் படைகள் ஈடுபட்டுள்ளன.

ஆப்கானிஸ்தான் மீது அமெரிக்கா தாக்குதல் நடத்தி தலிபான் ஆட்சியை ஒழித்த பின் அங்கு தங்கியிருந்த ஒஸாமா மற்றும் தலிபான் தலைவர் ஓமர் உள்ளிட்டவர்கள் பாகிஸ்தான் எல்லைப் பகுதியில் ஓடி ஒளிந்தனர். இவர்களைத் தேடும் பணியில் அமெரிக்கப்படைகள் தொடர்ந்து ஈடுபட்டுவருகின்றன.

இந்நிலையில் காஷ்மீர் எல்லைப்பகுதியிலுள்ள ஜில்ஜிட் மலைப் பகுதியில் ஒஸாமாவும் அவரது கூட்டாளிகளும் ஒளிந்திருப்பதாக அமெரிக்கா சந்தேகிக்கிறது. இதையடுத்து ஜில்ஜிட் மற்றும் பால்டிஸ்தான் பகுதிகள் அடங்கிய பாலவாரிஸ்தான் பகுதியில் அமெரிக்கப் படைகள் ஒஸாமாவையும் அவரது பிரதிச் செயலாளர் அல்ஜபாரியையும் தேடிவருகின்றன.

அமெரிக்க வெளியுறவுத்துறை பிரதிச் செயலர் கிறிஸ்ரீனா றொக்காவும் பாகிஸ்தானுக்கான அமெரிக்கத் தூதர் நான்சி பாவெல்லும். ஜில்ஜிட் பகுதியில் நடக்கும் அமெரிக்கப் படைகளின் தேடும் பணிகளை கடந்த மாதம் பார்வையிட்டனர்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

அம்பாறை மாவட்டத்தில்

# கண்காணிப்புக்குழு பிரதிநிதிகள் விடுதலைப் புலிகளுடன் சந்திப்பு!

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் குயிலின்பனைச் சந்தித்துப் பேச்சு நடத்தினர். இந்தச் சந்திப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறை அலுவலகத்தில் நடைபெற்றது.

இதன்போது மாவட்டத்தில் போர்நிறுத்த உடன்பாடுகளின் நடைமுறை குறித்து விரிவாக ஆராயப்பட்டதாக அம்பாறை மாவட்ட தமிழழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

திருக்கோவிலில் அமைந்துள்ள விசேட அதிரடிப்படை முகாமுக்குள் இருக்கும் வைத்தியசாலையை மீண்டும் மக்கள் பாவனைக்கு விட்டுத்தரவேண்டும் என தாம் பலமுறை கேட்டுக்கொண்டதற்கு அமைய கொழும்பில் நடைபெற்ற உயர்மட்ட மாநாட்டின் முடிவிற்கு அமைய போர்நிறுத்தக்கண்காணிப்பு குழு இந்த மாதத்திற்குள் குறிப்பிட்ட முகாமை மூடி வைத்தியசாலையை திறப்பதற்கான தீர்மானத்தை வெளியிட்டது. எனினும் இது எந்தளவுக்கு வாய்ப்பென்பதை தம்மால் கூறமுடியாதுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை இது தொடர்பாக விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரியான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நிமால் லெஹே கருத்துத் தெரிவிக்கையில்,அம்பாறை மாவட்டத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்த திருக்கோவில் முகாம் அவசியமானது.இந்த நிலையில் அங்குள்ள வைத்தியசாலையும் மக்களின் பாவனைக்காக திறக்கப்படவேண்டும்.

இதனடிப்படையில் முகாம் மூடப்பட்டு வேறொரு இடத்திற்கு மாற்றப்படவேண்டும் என்பதை ஏற்றுக்கொள்கின்றபோதும் அதற்கான நிதி இன்னும் கிடைக்கவில்லை.அந்த நிதி கிடைத்ததும் முகாமை தாம் வேறொரு இடத்திற்கு மாற்ற நடவடிக்கை எடுக்கப்போவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

மீண்டும் யுத்தத்தைத் தொடங்க நினைத்தால்

# நாட்டைத் தூக்கில் போடும் முயற்சியாகவே அமையும்!

திருமலை மாவட்ட தமிழ்மக்கள் ஜனாதிபதிக்கு எச்சரிக்கை

இடைக்கால நிர்வாகத்தின் அடிப்படையில் பேச்சுவார்த்தை இல்லை என்ற ஜனாதிபதியின் அறிவிப்பு, நாட்டை தூக்கில் போடும் முயற்சியாகும் என திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரன் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளார்.

இடைக்கால நிர்வாகசபை யோசனையின் அடிப்படையில் உடனடியாக பேச்சுக்களை ஆரம்பிக்குமாறும் அவ்வாறின்றி காலநடிப்புடன் இழுத்தடிப்பு நடக்குமாயின் எமது போராட்டத்தை முன்னெடுப்பதைத் தவிர வேறுவழி இல்லையென மாவீரர் தின உரையில் தமிழீழ தேசியத் தலைவர் தெரிவித்துள்ளார்.

இந்த உரையானது சமாதானத்தை விரும்பும் சகல மக்களாலும் வரவேற்கப்பட்டது. அவரின் அந்த மகத்தான உரையை அரசாங்கத்தின் அங்கமாகிய ஜே.வி.பி. என்னும் குழப்பவாத பேரினவாதிகளும் , ஹெலஉறுமய போன்ற பௌத்த பேரினவாதிகளும் ஏன் அரசாங்கத்தின் ஒரு பிரிவினரும் கூட திரிபுபடுத்தி தென் இலங்கையில் இனவாத பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர்.

தேசியத் தலைவரின் உரைக்கு அரசாங்கத்தின் பதில் என்னவாக அமையப்போகின்றது என்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த தமிழ் மக்களுக்கு ஜனாதிபதியின் அறிவிப்பானது மிகப்பெரிய மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளது.

1994 ஆம் ஆண்டு சமாதான தேவதையாக தன்னை வெளிப்படுத்திக்கொண்டு ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட்ட சந்திரிகா அம்மையார் தமிழ்மக்களின் அமோக ஆதரவைப்பெற்று பெரு வெற்றி ஈட்டினார்.

உண்மையான சமாதானத்தை கொண்டுவருவார் என எதிர்பார்த்திருந்த தமிழ்மக்களுக்கு எதிராக ஜனாதிபதியும் அவரது அரசாங்கமும் மோசமான யுத்தத்தைத் தொடுத்தனர். யுத்தத்தின் காரணமாக முழுத் தேசமும் சீரழிந்தது. இலட்சக்கணக்கான மனித உயிர்கள் அநியாயமாகப் பலியாகின. கோடிக்கணக்காண சொத்துக்கள் அழிந்துள்ளன. நாட்டின் பொருளாதாரம் சிதைந்து போய் உள்ளது.

தற்போதுள்ள சமாதானம் நீடித்து நிலைக்கவேண்டும் என்று எண்ணிய மக்களுக்கு ஜனாதிபதி வெளியிட்டுள்ள அறிவிப்பானது மிகுந்த துயரத்தை ஏற்படுத்தியுள்ளது. இந்த நாட்டின் மீதும் மக்களின் மீதும் ஜனாதிபதிக்கு உண்மையான பற்றிருக்குமாயின் சமாதானத்திற்கெதிரான ஜே.வி.பி. போன்ற இனவாத சக்திகளை தூக்கியெறிந்துவிட்டு இடைக்கால நிர்வாகசபை யோசனை அடிப்படையில் பேச்சுக்களைத் தொடங்க வேண்டுமென வேண்டுகின்றோம். அவ்வாறு செய்வீர்களாயின் சமாதானத்தை விரும்பும் சகல சக்திகளும் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்குவர்.

அவ்வாறு இன்றி ஜே.வி.பி. போன்ற காடைத்தன அரசியல்வாதிகளுக்குப் பயந்து தனது இருப்பினை நிலைநிறுத்திக் கொள்வதற்காக அரசியல் காய்நகர்த்தல்களில் ஈடுபட்டு மீண்டும் தமிழ் மக்களுக்கெதிரான செயற்பாடுகளில் ஜனாதிபதி ஈடுபடுவாரானால் நாடு பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் சீரழிந்து சின்னா பின்னமாகும் என்பதில் ஐயமில்லை.

எனவே ஜனாதிபதி தனது அறிவிப்பினை மீள் பரிசீலனை செய்ய வேண்டுமென வேண்டிக்கொள்கின்றோம். அவ்வாறின்றி தற்போதைய நிலைப்பாட்டிலேயே ஜனாதிபதி இருப்பாராக இருந்தால் இதனை ஒரு யுத்த அறிவிப்பாக தமிழ் மக்கள் கருதுவார்கள். மீண்டும் தமிழ் மக்கள் மீது யுத்தம் திணிக்கப்பட்டால் அதனை தமிழீழத் தேசியத் தலைவரோடு சேர்ந்து எதிர்கொள்வதைத் தவிர தமிழ் மக்களுக்கு வேறு வழியில்லை.

இந்தியா, அமெரிக்கா போன்ற ஏகாதிபத்தியவாதிகளின் துணையுடனும் ஏனைய நாடுகளின் இராணுவ உதவியுடனும் மீண்டும் யுத்தத்தை ஆரம்பிக்க ஜனாதிபதி நினைத்தால் உண்மையில் அது நாட்டை தூக்கில் போடும் முயற்சியாகவே அமையும் என்பதை அரசுக்கும் ஜனாதிபதிக்கும் திருகோணமலை மாவட்ட தமிழ்மக்கள் சார்பில் தெரிவித்துக் கொள்கின்றோம் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நோர்வேயின்....

வேண்டுமெனவும் தெரிவித்தார்.

இவற்றைப் பொறுமையாகக் கேட்டுக்கொண்டிருந்த அமைச்சர் மங்கள சமரவீர -

விமல் வீரவன்சவுடன் நெருங்கிப் பழகுவது உண்மையெனவும், இவ்வாறு செய்வதற்குக் காரணம், ஜனாதிபதிக்கு தேவையானவற்றை அவரிடமிருந்து பெற்றுக்கொள்வதற்காகவே எனவும் தெரிவித்தார்.

அத்துடன் இடைக்கால நிர்வாக சபை தொடர்பாக விமல் வீரவன்ச தெளிவான நிலைப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது.

## இந்தியாவை...

சமாதானம் என்ற பெயரில் இலங்கை அரசாங்கம் போடும் இரட்டை வேடத்தையும் தெரிந்து கொள்ளும்.

வெளிநாடுகளில் ஏற்பாடு செய்யும் இத்தகைய பேரணிகளுக்கு அங்குள்ள இந்திய நிறுவனங்கள், வர்த்தக நிலையங்கள், அரசு சாரா அமைப்புகள், கழகங்கள் இந்தியாவின் பல்வேறு சமூகங்கள் ஆகியவற்றிடமிருந்தும் ஆதரவைப் பெற்றுக் கொள்ளலாம்.

இதேவேளை தென்னிந்தியத் திரைப்படத் துறையினரிடமும் இது குறித்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தி அரசுக்கு அழுத்தம் கொடுக்கக் கோரவேண்டும்.

தென்னிந்தியத் திரைப்படங்களுக்கு வெளிநாடுகளிலுள்ள ஈழத் தமிழர்களால் பலகோடி ரூபா பணம பெரும் லாபமாகக் கிடைக்கிறது என்றால் மிகையில்லை. அதாவது அவர்களது ஊதியத்துக்கு ஈழத் தமிழர்களது பங்கு மிகப்பெரியது.

ஆகவே ஈழத் தமிழர்களுக்கு எதிரான ஒரு இனஅழிப்பு நடவடிக்கைக்கான உதவியை இந்திய அரசு மேற்கொள்ள அவர்கள் ஒருபோதும் அனுமதிக்கக்கூடாது.

பாகிஸ்தான் படையினரால் கொல்லப்பட்ட தமது நாட்டுப் படையினருக்கு உதவிசெய்ய கார்கில் நிகழ்ச்சி நடத்தி நிதி சேகரித்துக் கொடுத்த தென்னிந்தியத் திரையுலகம், தமது அரசின் நடவடிக்கையால் தொப்புள் கொடி உறவான ஈழத தமிழர்கள் பாதிக்கப்படும் இந்த இக்கட்டான சூழ்நிலையிலும் தமது நியாயமான கரிசனையைக் காண்பிக்கவேண்டும். நேரடியாக அல்லது தமிழ்நாடு அரசின் ஊடாக மத்திய அரசுக்கு அழுத்தம் கொடுக்கவேண்டும். மக்கள் சக்தியால் மட்டுமே இந்த முற்தடுப்பு நடவடிக்கையை செம்மையாக செய்துமுடிக்கலாம் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# இலங்கையில் தயாரிக்கப்பட்ட 580 கிலோ நிறையுடைய கேக்!

(கொழும்பு)

இலங்கையில் மிகப்பெரிய கேக் நெஸ்லோ நிறுவனத்தால் தயாரிக்கப்பட்டு ஹொட்டேல் கலதாரியில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் வெட்டப்பட்டது.

580 கிலோ எடையுள்ள இந்தக் கேக் நேற்றுக்காலை ஹொட்டேல் கலதாரியில் வெட்டப்பட்டது.

புகழ்பெற்ற சமையற்காரர் இந்த கேக்கைத் தயாரித்திருந்தார். ஒலிம்பிக் சமையற்போட்டியில் இவர் 5 தங்கப்பதக்கங்களைப் பெற்றிருந்தார்.

வெட்டப்பட்ட இந்தக் கேக் தெரிவு செய்யப்பட்ட 30 சிறுவர் இல்லங்களுக்கும் முதியோர் இல்லங்களுக்கும் விநியோகிக்கப்பட்டது.

# போரில் உயிரிழந்தவர்களுக்கு மன்னாரில் அஞ்சலி நிகழ்வு!

கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது மன்னார் மாவட்டத்தில் உயிரிழந்த விடுதலைப் புலிப் போராளிகள், பொதுமக்கள் மற்றும் இராணுவத்தினர் ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தும் நிகழ்வொன்று இன்று மன்னாரில் நடைபெறவுள்ளது. மன்னார் 'வாழ்வோதயம்' இதற்கான ஏற்பாட்டை மேற்கொண்டுள்ளது.

மன்னார் நகர மண்டபத்தில் வாழ்வோதய இயக்குனர் அருட்தந்தை பி.யேசுராஜா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், புனித பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் பிரதிநிதி மலியோ செனாதி - கடந்தகால யுத்த நடவடிக்கைகளின்போது உயிரிழந்த விடுதலைப் புலிப் போராளிகள், பொதுமக்கள் மற்றும் படையினருக்காக விசேட பிரார்த்தனையை நடத்தவுள்ளார் (201)

## ஆகக்....

ஆகக் கூடுதலான மழைவீழ்ச்சி யாழ்ப்பாணத்திலேயே பதிவாகியிருந்தது.

இதனிடையே அடுத்த 36 மணி நேரத்தில் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பலத்த மழை தொடர்நது நீடிக்கும் என்றும்,

வடக்கு, கிழக்கு கரையோரப் பகுதிகளில் மழை தொடர்வதுடன் 15தொடக்கம் 25 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் என்றும் கடல் கொந்தளிப்பாகக் காணப்படும் என்றும் வளிமண்டலத் திணைக்களம் எச்சரித்துள்ளது.

## ஆயிரக்கணக்...

தமிழீழ விடுதலைப் புலிகளின் பரப்புரைப் பொறுப்பாளர் சபேசன் தேசியத் தலைவரின் உரையின் முக்கியத்துவம் குறித்தும், தற்கால அரசியல்நிலை குறித்தும் உரையாற்றியதுடன், தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலையும் ஆய்வு செய்தார். அதனைத் தொடர்ந்து இந்த நூல் வெளியீடு நடைபெற்றது.

தமிழக ஓவியர் புகழேந்தியின் சிறப்புரையும், சிட்னி இளைஞர்களின் நாடகமும், மெல்பேர்ன் இளைஞர்களின் நாடகமும், நாட்டிய பாடல் நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

## தொடர்ந்து....

நேற்று முழுநாளும் மழை பெய்ததால் குடாநாட்டில் இயல்பு வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டது.

பொதுமக்கள் வீடுகளிலேயே முடங்கிக் கிடந்ததுடன் வீதிகளில் நடமாடுவதைத் தவிர்த்திருந்தனர்.

வடமராட்சி, தென்மராட்சி, மற்றும் யாழ்.நகரை அண்டிய பகுதியில் பல இடங்களில் வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பெருமளவானோர் இடம் பெயர்ந்தனர்.

இடம் பெயர்ந்த மக்கள் பொது இடங்களில் தஞ்சமடைந்தனர். வெள்ளப்பாதிப்புக்குள்ளாகி இடம் பெயர்ந்த குடும்பங்களின் எண்ணிக்கை நூறுக்கும் அதிகமாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

இதேநேரம் வடக்கு - கிழக்கின் எல்லா மாவட்டங்களிலும் கடும் மழை தொடர்ந்து பெய்து வருவதாகச் செய்திகள் தெரிவித்தன. வன்னியில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் இரணைமடுக் குளத்தின் நீர்மட்டம் உயர்ந்திருப்பதைத் தொடர்ந்து குளத்தின் கதவுகள் அனைத்தும் திறந்து விடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக

# நோர்வே செயற்படுகின்றதென தூதரகங்களுக்குப் பிரசாரம்!

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளுக்கு ஆதரவாக நோர்வேயின் சமாதானப் பிரதிநிதிகள் செயற்படுவதாக அனைத்து வெளிநாட்டுத் தூதரகங்களுக்கும் தெரியப்படுத்த, அரசியற் கொலைகள் மற்றும் கடத்தல்களுக்கெதிரான அரசியற் கட்சிகள், சமூக அமைப்புக்கள் தீர்மானித்துள்ளன.

இதுவரை குவைத், பாகிஸ்தான் தூதரகங்களுக்கு இது தொடர்பாகத் தெரியப்படுத்தப்பட்டதாகவும், அடுத்து வரும் நாட்களில் மற்றைய தூதுவராலயங்களுக்கும் தெரியப்படுத்தப்படுமெனவும் இந்த அமைப்புக்கள் தெரிவித்தன.

மக்கள் ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி, ஈ.பி.டிபி, புளொட், தேசிய பிக்குகள் முன்னணி, பல்கலைக் கழகங்களின் கலாநிதிகள் சங்கம், மக்கள் அமைப்புகள் என்பனவே இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளன. (தே)

## ஆத்ம சாந்தி கிரியை அழைப்பு



### திருமதி அன்னலட்சுமி மாணிக்கம் (செல்வநாயகம்)

எமது குலதெய்வத்தின் அந்தியேட்டிக் கிரியைகள் 08.12.2004 அன்று கீரிமலையிலும், வீட்டுக்கிரியைகள் 10.12.2004 வெள்ளிக் கிழமை நடைபெறும்.

எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையில் கலந்துகொண்டு மதிய போசனத்திலும் பங்கேற்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

*2 ஆம் ஒழுங்கை,*
*கைலாய பிள்ளையார் வீதி,*
*சாவகச்சேரி.*
*தொ.பே:0777 852077*
*07776171545*

இங்ஙனம்
ம.குலேந்திரன் (மகன் - லண்டன்)
க.உமாமகேஸ்வரன (அமுது) - மருமகன்
சி.கந்தசாமி (மருமகன் - கனடா)

சர்வதேச மனிதஉரிமைகள் தினம் மார்கழி மாதம் 10 ஆம் திகதியாகும்!

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 05.12.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.